# வெறு முரசு

Approved by the Text Book Committee - for Class Use
Vide page 114 of Fort St. George Gazette Part I B
dated 7-5-52


ஆசிரியர் :

M. A. துரை அரங்கசாமி, M.A., M.O.L.,
தலைமைத் தமிழ் விரிவுரையாளர்,
சென்னை, பல்கலைக் கழகம்.



விந்திய வெளியீடுகள்
1-1, பெரியண்ண மேஸ்திரி தெரு,
சென்னை-1.



[உரிமை பதிவு]



1952


[விலை: 15 அணா

முதற்பதிப்பு—1951.
இரண்டாம் பதிப்பு—1952.

Arutperunjothi Press, Madras-1.

# முன்னுரை

டால்ஸ்டாய் கதைகள் அறவுணர்வையும் தெய்வ உணர்வையும் மக்கள் உள்ளத்தில் வேரூன்றிச் செய்வன என்பது அறிவுடையோர் அனைவரும் உடன்படும் உண்மையாகும். ஆனால், அவை மேனாட்டுச் சூழ் நிலையை அடிப்படையாகக் கொண்டு எழுதப் பெற்றவை. அச் சூழ்நிலை பற்றியுள்ள கதைகள் நம் தமிழ் நாட்டார்க்கு முழுச் சுவையையும் உண்டாக்க மாட்டா. எனவே நம் தமிழ் நாட்டுச் சூழலை அமைத்து, டால்ஸ்டாய் அறிஞருடைய கருத்துக்களை மட்டும் எடுத்துக்கொண்டு, தமிழர் பண்பாட்டிற்கு ஏற்ப அவர் கதைகளைத் தழுவி இந் நூலுள் மூன்று கதைகளை எழுதியுள்ளோம். மாணவர்களுக்கு ஏற்ற நடையில், சுவையுடன் வெளிவரும் இக் கதைகள் அடங்கிய நூலை, நம் தமிழ் மாணவர்கள் விரும்பி ஏற்பார்கள் என்பது திண்ணம். கல்வித் துறை அதிகாரிகளும் ஆசிரியர்களும் இதனை மாணவர்கள் பெற்றுப் படிப்பதற்குத் தேவையான நலன்களை அமைத்துத் தருவார்களாக! இந்நூலை அழகிய முறையில் வெளியிட்ட விந்திய வெளியீட்டார்களுக்கு எம் உளமார்ந்த நன்றி.

மொ. அ. துரை அரங்கசாமி

# பொருளடக்கம்

பக்கம்


1. வெறு முரசு 1

2. முதியோர் இருவர் 24

3. தெய்வம் நின்று உணர்த்தும் 73

# வெறு முரசு

## ஐயாசாமியும் பொன்னியும்

ஐயாசாமி ஒரு தொழிலாளி. அவன், தன் உடல் வருத்தம் சிறிதும் பாராமல், ஒரு முதலாளியிடம் உண்மையாக வேலை செய்து வந்தான். ஒரு நாள், புல்வெளிகள் நிறைந்த வழியே, அவன் தன் முதலாளி வீட்டிற்குப் போய்க்கொண்டிருந்தான். அப்போது, ஒரு தவளை அவனுக்கு முன்னால் குதித்து வந்தது. அதன் மீது, அவன் தெரியாமல் காலை வைத்துவிட்டான். சிறிது சமாளிக்காமல் போயிருந்திருப்பானானால், அது கூழ் கூழாய்ப் போயிருக்கும். அதே சமயத்தில், யாரோ ஒருவர் பின்னாலிருந்து கூப்பிட்ட ஒலி அவன் காதில் விழுந்தது.

ஐயாசாமி திரும்பிப் பார்த்தான். மங்கைப் பருவமுள்ள ஒரு நங்கை அவன் முன் தோன்றினாள். தோன்றினவள், அவன் அருகே வந்து, "நீங்கள் ஏன் இன்னும் மணம் புரிந்து கொள்ளவில்லை?" என்று கேட்டாள்.

"மணமா! நன்றாயிருக்கிறது! இப்படிப் பார்! என் ஆடையைக் கவனி! இதை மாற்றி உடுக்க வேறு ஆடை எனக்குக் கிடையாது. இந்த நிலையில் இருக்கும் என்னையா யாராவது மணந்துகொள்ள விரும்புவார்கள்?"

"அப்படியா! நானே உங்களை மணந்து கொள்கிறேன்; என்னை உங்கள் காதலியாக ஏற்றுக் கொள்ளுங்கள்," என்று அவள் வேண்டினாள்.

அவள் பேச்சு ஐயாசாமியின் உள்ளத்தை அள்ளிக் கொண்டது.

"உன்னை மணந்து கொள்ள எனக்கு விருப்பந்தான். ஆனால், மணமான பிறகு, நாம் இருவரும் எவ்விடத்தில், எவ்வாறு வாழ்வது?" என்றான் ஐயாசாமி.

அதைப்பற்றி ஏன் அவ்வளவு கவலைப்படுகிறீர்கள்? உழைப்பை மட்டும் சிறிது பெருக்கிக்கொண்டு, தூக்கத்தை ஓரளவு குறைத்துக்கொண்டால், தேவையான உணவும் உடையும் பெற்று, எவ்விடத்தில் வேண்டுமானாலும் வாழலாமே!" என்றாள் பொன்னி.

"அப்படியானால், நமக்கொன்றும் குறைவேயில்லை. அப்படியே நாம் மணம் புரிந்து கொள்வோம். எவ்விடத்திற்குப் போகலாம்!"

"நகரத்திற்குப் போவோம்!"

ஐயாசாமியும், பொன்னியும் நகரத்திற்குள் புகுந்தனர். புகும் வழியிலேயே இருந்த ஒரு குடிசைக்குள், பொன்னி, ஐயாசாமியை அழைத்துச் சென்றாள். அங்கே அவர்கள் மணம் புரிந்து கொண்டு வழித் துணைவனும், வாழ்க்கைத் துணைவியும் ஆனார்கள். அவர்கள் வாழ்க்கை மிக்க இன்பமாகவே இருந்தது.

## அரசனும் பொன்னியும்

ஒருநாள், அந்த நகரத்து அரசன் அந்தக்குடிசை வழியாகச் சவாரி செய்துகொண்டு வந்தான். குதிரையின் காலடி ஒலி கேட்டதும், பொன்னி வெளியே வந்து பார்த்தாள். அரசன் பொன்னியைக் கண்டான். பெரு வியப்படைந்தான்.

"இவ்வளவு அழகுடையவள் எங்கிருந்து நம் நகரத்திற்கு வந்தாள்!" என்று அரசன் தனக்குள் எண்ணிக் கொண்டு, குதிரையை விட்டுக் கீழே இறங்கி, "நீ யார்?" என்று அவளைக் கேட்டான்.

"நான், நாகரிகம் அறியாத ஐயாசாமி என்பவருடைய மனைவி," என்றாள் பொன்னி.

"இவ்வளவு அழகுடைய நீயா, போயும் போயும்! நாகரிகம் அற்றவனை மணந்தாய்? நீ ஓர் அரசியாக அன்றோ இருக்கவேண்டும்!" என்றான் அரசன்.

"உங்கள் அன்பான மொழிகளுக்கு நன்றி! எனக்கு நாகரிகம் அற்ற கணவரே போதும். போய் வாருங்கள்," என்றாள் பொன்னி.

## அரசன் ஏக்கம்

இவ்வாறு அவளோடு சிறிதுநேரம் பேசியிருந்து விட்டு, அரசன் தன் அரண்மனைக்குத் திரும்பினான். ஆனால் பொன்னியை மட்டும் அவனால் மறக்கவே முடியவில்லை. இரவு முழுவதும், அவனுக்கு தூக்கமே பிடிக்கவில்லை. எப்படியாவது அவளைத் தன் பட்டத்தரசி ஆக்கிக் கொள்ள வேண்டும் என்று அவன் கருதினான்; அவளை அடைவது எவ்வாறு என்று எண்ணிப் பார்த்தான். அவனுக்கு ஒரு வழியும் புரியவில்லை. பொழுது விடிந்ததும், அவன் தன் அமைச்சர்களையும், வேலையாட்களையும் கூப்பிட்டு, அவளைத் தான் அடைவதற்கு, ஒரு வழி கண்டு கூறுமாறு வேண்டினான்.

## சூழ்ச்சி

உடனே அவர்கள், "ஐயாசாமிக்கு, 'அரண்மனையில் வந்து வேலை செய்யவேண்டும்' என்று கட்டளை

யிடுங்கள். அவனால் சுமக்க முடியாதபடி நாங்கள் வேலை கொடுக்கிறோம். அதனால், அவன் மிக விரைவில் உடல் வருத்தம் தாங்காமல் இறந்துபோவான். அப்போது அவளை நீங்கள் எளிதில் அடையலாம்," என்றார்கள்.

அரசன் அவர்கள் கூறியபடியே தூதுவர்கள் மூலமாக ஆணை அனுப்பினான்; அதனோடு, அரண்மனையின் அருகிலேயே, ஐயாசாமியும் பொன்னியும் குடியேறவேண்டும் என்றும் கட்டளை பிறப்பித்தான்.

அரசன் ஆணையைத் தூதுவர்கள் ஏற்று, விரைந்துவந்து ஐயாசாமியிடம் கூறினார்கள். அவன் மனைவி, தன் கணவனை நோக்கி, "அரசர் ஆணைப் படியே, அரண்மனைக்குச் சென்று நாள் முழுதும் வேலை செய்யுங்கள். ஆனால் பொழுது போனதும் நம் குடிசைக்கே திரும்பி வந்துவிடுங்கள்," என்றாள்.

எனவே, ஐயாசாமி மட்டும் அரசனிடம் சென்றான். "உன் மனைவியில்லாமல் நீ மட்டும் ஏன் தனியே வந்தாய்?" என்று அவனை முதல் அமைச்சன் கேட்டான்.

"அவளை ஏன் நான் இங்கே அழைத்துக் கொண்டு வரவேண்டும்? ஏதோ ஒரு குடிசை இருக்கிறது. அங்கே அவள் இருக்கிறாள்," என்றான் ஐயாசாமி.

## ஐயாசாமி பணி

அன்று ஐயாசாமிக்கு இரண்டு பேர்கள் செய்து முடிப்பதற்கு உரிய வேலையை அரசனுடைய வேலைக்காரர்கள் கொடுத்தார்கள். ஐயாசாமி அதை உற்று நோக்கினான். "இதேது! நம்மால் இவ்வளவும் செய்ய முடி

யாது போலிருக்கிறதே!" என்று அச்சத்துடனே அவன் வேலையைத் தொடங்கினன். ஆனல் பொழுது போவதற்குள் வேலை முழுதும் செவ்வை யாகவே முடிந்துவிட்டது. அது கண்டமுதலமைச்சன் மறுநாள் நான்குஆட்கள் வேலையை ஐயாசாமிக்குக் கொடுக்க வேண்டும் என்று தன் ஆட்களுக்குக் கட்டளை யிட்டான்.

வேலை முடிந்ததும், ஐயாசாமி தன் குடிசைக்கு வந்தான். குடிசை அவன் கண்ணைக் கவர்ந்து நின்றது. குப்பை கூளம் ஒன்றுமில்லாமல் பெருக்கி வாரி விட்டு, ஒவ்வொரு பொருளையும் அதது இருப்பதற்கு உரிய இடத்தில் இருக்கச்செய்து, குடிசையைச் செவ்வையாக வைத்திருந்தாள் பொன்னி. அடுப்பு எரிந்துகொண்டிருந்தது. உணவு தயாராய் இருந்தது. எல்லாம் முடித்துவிட்டுக் கணவன் வரவைப் பொன்னி எதிர்பார்த்து நின்ருள். அவன் வந்ததும் முகமலர்ச்சியுடன் அவனை எதிர்கொண்டழைத்துச் சென்று, உணவு படைத்து உண்ணச் செய்தபின் அவனுடைய வேலையைப் பற்றிக் கேட்டாள்.

"அப்பப்பா! வேலை மிகவும் மோசமானது. என்னல் தாங்கமுடியாத அளவு வேலைகொடுத்து என்னை விரைவில் கொல்லப் பார்க்கிருர்கள்!" என்ருன் ஐயாசாமி.

"சரி சரி! வேலையைக் குறித்து அவ்வளவாக எரிச்சல் கொள்ளவேண்டா. வேலை செய்யும்போது "இதுவரையில் எவ்வளவு முடிந்தது?' இன்னும் எவ்வளவு முடியவேண்டும்? என்று ஒன்றையும் கருதாமல் பேசாமல் வேலைசெய்து வாருங்கள். எல்லாம் சரிவரவே முடியும்." என்ருள் பொன்னி.

எனவே, ஐயாசாமி, ஒன்றும்பேசாமல், படுத்து உறங்கினன். மறுநாள் பொழுது விடிந்ததும் அவன் எழுந்து வேலைக்குச் சென்றான். சிறிதும் பராக்குப் பாராமல், வேலைமேலேயே கண்ணும் கருத்தும் இருத்தினன். அது நான்கு ஆட்கள் செய்து முடிப் பதற்குரிய வேலைதான்! ஆனல், பொழுதுபோவ தற்குள் அவ்வேலை முழுதும் எப்படியோ முடிந்து விட்டது! இருட்டு வருவதற்குள், ஐயாசாமி தன் குடிசைக்குத் திரும்பி வந்தான்.

நாளுக்கு நாள் வேலையின் அளவு பெருகிக் கொண்டே வந்தது. ஆனல், ஐயாசாமியோ, ஒவ்வொரு நாளும் பொழுது போவதற்குள், குறை சிறிதும் இல்லாமல் வேலையை முடித்துவிட்டுக் குடிசைக்குத் திரும்பி வந்து, கவலையே யின்றி உறங்கி எழலானன்.

ஒரு வாரம் கழிந்தது. முரட்டுவேலை வாங்குவதன் மூலமாக மட்டும் ஐயாசாமியை நசுக்கிவிட முடியாது என்பதை அரசனுடைய ஆட்கள் தெளிவாக உணர்ந் தார்கள். எனவே, மதிநுட்பத்தால் செய்து முடிப்பதற்கு உரிய வேலைகளை அவர்கள் கொடுத்துப் பார்த்தார்கள். அவற்றாலும் அவனை அவர்கள் ஒன்றும் அசைக் கவே முடியவில்லை. தச்சு வேலை, கட்டடவேலை, கூரைவேயும் வேலை—இப்படி எந்தவிதமானவேலை கொடுத்தாலும், பொழுது போவதற்குள் முடித்து விட்டு, ஐயாசாமி, தன் மனைவியிடம் வந்து சேரு வான். இவ்வாறு இரண்டாவது வாரமும் கழிந்தது.

## அரசன் சீற்றம்

பார்த்தான் அரசன்; தன் ஆட்களையெல்லாம் கூப்பிட்டான். "வீணுக்கா நான் உங்களுக்குச்

சோறு போடுவது? இரண்டு வாரங்கள் கழிந்தன. நீங்கள் ஒன்றுமே செய்ததாகத் தெரியவில்லையே! 'இதோ பாருங்கள்! இன்றைக்கு வேலை வாங்கி ஐயா சாமியை நசுக்கிப்போடுகிறோம்?' என்று பெருமை பேசிக்கொண்டு போகிறீர்கள்! நான் பலகணி (ஜன்னல்) வழியாக நாள்தோறும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். பொழுது போவதற்கு முன்பே வேலையை ஒழுங்காக முடித்துவிட்டு, மகிழ்ச்சியோடு பாடிக்கொண்டு அன்றோ ஐயாசாமி, வீட்டிற்குச் செல்கிறான்! என்னை முட்டாளாக்கவா பார்க்கிறீர்கள்?' என்று கடுகடுத்துக் கூறி, அவர்கள் மீது அரசன் சீறி விழுந்தான்.

### கோயில் கட்ட

அரசனுடைய ஆட்கள் தங்களைத் தாங்களே நொந்துகொண்டார்கள். "உடல் தாங்க மாட்டாத கரடு முரடான வேலைகளையெல்லாம் மிகுதியாகவே கொடுத்துத்தான் அவனை நசுக்கப் பார்த்தோம். ஆனால் அவன் எதையுமே பொருட்படுத்தவில்லை. என்ன வேலை கொடுத்தாலும், ஏதோ துடைப்பத்தால் குப்பையைத் தள்ளிவிடுவது போன்றே, அவன் எளிதாக முடித்துவிடுகிறான். ஒன்றுக்குமே அவன் இளைப்பவனாகத் தோன்றவில்லை. பின்பு, மதிநுட்பத்தால் செய்து முடிப்பதற்கு உரிய வேலைகள் பலவற்றைக் கொடுத்துப்பார்த்தோம். அவனுக்கு அவ்வளவாக நுட்பமதி இல்லையென்றே கருதினோம். ஆனால், அவற்றையும் அவன் சிறிதும் பொருட்படுத்தாமல் செய்து முடித்து விட்டான். யார் எதைச் சொன்னாலும் சரி. அதை அவன் செய்து முடித்துவிடுகிறான். ஆனால், எப்படிச் செய்து முடிக்கிறான் என்பது மட்டும் எங்களுக்குப் புரியவில்லை. அவனுக்கோ, அவன் மனைவிக்கோ, ஏதோ ஒரு மாயவித்தை தெரிந்திருக்க

வேண்டும். அதுவே, அவர்களுக்குத் துணையாகின்றது என்று நினைக்கிறோம். அவனால் நாங்கள் படும் துன்பம், இவ்வளவு அவ்வளவு என்று கூறவே முடியாது! அவனால் செய்து முடிக்க முடியாத ஒரு வேலையைக் கண்டுபிடிக்கப் பெரிதும் முயன்றுவருகிறோம். 'ஒரு கோயிலை ஒரே நாளில் கட்டி முடிக்க வேண்டும்' என்ற வேலையை அவனுக்குக்கொடுத்துப் பார்க்கலாம், என்று இப்போது நாங்கள் கருதுகின்றோம். அவனைக் கூப்பிட்டு, 'அரண்மனைக்கு எதிரில் ஒரே நாளில் ஒரு கோயில் கட்டி முடிக்க வேண்டும்,' என்று நீங்கள் கட்டளையிடுங்கள். அதை அவன் கட்டி முடிக்கவில்லையென்றால், குற்றம் சாட்டி அவன் தலையை வாங்கி விடலாம்,'' என்று அவர்கள் கூறினார்கள்.

அரசன் ஐயாசாமியை அழைத்துவரச் செய்தான். ஐயாசாமி அரசன் எதிரில் வந்து நின்றான்.

அரசன் அவனை நோக்கி ''ஐயாசாமி, நான் இடும் கட்டளையைக் கவனி! என் அரண்மனைக்கு எதிரில் ஒரு சதுரமான காலி மனை இருக்கிறது. அங்கே நாளைய மாலைக்குள், நீ ஒரு கோயில் கட்டி முடிக்க வேண்டும். அப்படிக் கட்டி முடித்தால் உனக்கு ஒரு சிறந்த பரிசு தருவேன். இல்லாவிடில் உன் தலையை நீ இழக்க வேண்டும்!'' என்றான்.

அரசன் ஆணையைக் கேட்டுக் கொண்டு, ஐயாசாமி தன் குடிசையை நோக்கி நடந்தான். அவன் மனம் குழம்பிற்று. ''என் வாழ்நாள் முடிந்தது! என்று அவன் தனக்குள் முடிவுசெய்துகொண்டான்; மனைவியை அடைந்ததும், ஏன் என்று கேளாமல் உடனே புறப்படு. எங்காவது ஓடி உயிர் பிழைப்போம்: இல்லாவிடில், ஒரு பிழையும் அறியாத நான் உயிர் இழக்க வேண்டி வரும்!'' என்று பரபரப்போடு சொன்னான்

"என்ன! உங்களை இவ்வளவு பயங்கொள்ளி யாக்கியது யாது? ஏன் நாம் ஓடி ஒளியவேண்டும்?" என்று கேட்டாள் பொன்னி.

"பயங்கொள்ளாமல் வேறு என்ன செய்வது? நாளைப் பொழுதிற்குள் ஒரு கோயில் கட்டி, முடிக்க வேண்டுமாம்! இல்லாவிட்டால் என் தலை போய்விடு மாம்! ஒரே நாளில் எப்படிக் கோயிலொன்று கட்டி முடிக்க முடியும்? இப்போது நாம் செய்வதற் குரிய செயல் ஒன்றே ஒன்றுதான். கால தாமதம் செய்யாமல் ஓடிப் பிழைப்பதுதான் அச் செயல். அதுவே நல்ல செயலுமாகும். புறப்படு!" என்றான் ஐயாசாமி.

பொன்னியின் செவியில் ஐயாசாமியின் சொற் கள் ஏறவில்லை. "ஓடிப் பிழைப்பதா! அரசருக்கோ, ஆயிரக் கணக்கான ஆட்கள் இருக்கின்றார்கள்! நாம் எங்கே ஓடினாலும், அவர்கள் ஓடிவந்து நம்மைப் பிடித்துக் கொள்வார்கள். அவர்களிடமிருந்து நாம் ஓடிப்பிழைக்கவே முடியாது. உடம்பில் உயிர் இருக்கும் வரையில், அரசர் இடும்கட்டளையைச் செய்வதுதான்தக்கது" என்றாள் பொன்னி.

"ஆனால், அரசர் இடும் வேலை என்னுடைய ஆற்றலுக்கு அப்பாற்பட்டதென்றால், அதை நான் எவ்வாறு செய்து முடிப்பது?"

"நீங்கள் கூறுவது நன்றாய் இருக்கிறது! அச்சம், கோழைகளின் குணம். தைரியத்தையே ஒருபோதும் இழத்தல் ஆகாது. இப்போது உணவருந்தி நன்றாகத் தூங்கி எழுங்கள். எல்லாம் குறைவில்லாமல் முடிவடையும்."

பொன்னியின் சொற்படியே, ஐயாசாமி உண்டு உறங்கினான். மறுநாள் அதிகாலையிலேயே பொன்னி அவனைத் தூக்கத்திலிருந்து எழுப்பினாள்.

காலதாமதம் செய்யாமல், விரைவாகச் சென்று கோயிலை முடித்துவிட்டு வாருங்கள். இங்கே பாருங்கள்! இந்தச் சுத்தியையும் ஆணிகளையும் கொண்டு செல்லுங்கள். இன்னும் ஒரு நாள் வேலைதான் இருக்கிறது. போய் வாருங்கள்,'' என்றாள் பொன்னி.

ஐயாசாமி நகருக்குள் புகுந்தான்; அரண்மனையை அடைந்தான்; அரண்மனையின் முன்னால் ஒரு புதுக்கோயிலைக் கண்டான்; அதில் கொஞ்சமே குறை யிருப்பதை நோக்கினான்; அதை முடிப்பதற்குச் செய்யவேண்டுவன எல்லாம் சுறுசுறுப்பாகச் செய்யத் தொடங்கினான். பொழுது போவதற்குள் கோயில் வேலை முழுதும் முடிந்தது!

அரசன், அன்று அதிகாலையிலேயே எழுந்தான்; வெளியே உற்று நோக்கினான். அரண்மனைக்கு எதிரில் கோயில் கட்டடம் தோன்றியது. ஐயாசாமி இங்கும் மங்கும் ஆணிகள் அடித்துக்கொண்டிருப்பதை அரசன் பார்த்தான். கோயிலைக்கண்டு அவன் மகிழ்ச்சி அடையவில்லை; ஆனால் ஐயாசாமியிடம் குறை காண முடியாது போகுமே என்றும், அவன் மனைவியைக் கைப்பற்ற முடியாதே என்றும் எண்ணி மனம் புழுங்கினான்; உடனே தன் ஆட்களைக் கூப்பிட்டான்.

## அகழி வெட்ட

"இந்த வேலையையும் ஐயாசாமி முடித்துவிட்டான்! அவன் தலையை வாங்குவதற்கு யாதொரு குற்றமும் ஏற்படவில்லை! இந்த வேலைகூட அவனுக்குப் பெரிதாகாது போயிற்றே! இனி, ஏதாவது ஒரு வஞ்சகமான வேலையைத்தான் அவனுக்குத் தரவேண்டும்! அவ்வாறு தந்து, அவனிடம் உடனே குற்றம் சுமத்தினால்

ஆயிற்று. இல்லாவிட்டால், அவன் தலையோடு உங்கள் தலைகளையும் உடனே என் வாளுக்கு இரையாக்கி விடுவேன்! என்று கோபாவேசத்தோடு அரசன் கூறினான்.

அரசனுடைய ஆட்கள் மறுபடியும் ஒன்றுகூடி எண்ணி எண்ணிப் பார்த்தார்கள். இறுதியில், ஐயாசாமிக்கு எவ்வகையிலும் செய்யமுடியாத வேலை இது தான்," என்று அவர்கள் ஒன்றைக் கண்டுபிடித்தார்கள். "அரண்மனையைச் சுற்றி ஓர் அகழி வெட்டவேண்டும். ஆழமானதாக அஃது இருக்கவேண்டும். அதில் நீர் நிரப்பி இருக்கவேண்டும் கப்பல்கள் அதில் போய்க்கொண்டும் வந்துகொண்டும் இருக்கவேண்டும்." இதுவே அவர்கள் கண்டுபிடித்த வேலை. "அகழியை வேண்டுமானால் வெட்டிவிடலாம். அதில் நீர் நிரம்ப இருக்க வேண்டுமா! அப்படித் தண்ணீர் நிரம்பஇருந்தாலும் கப்பல்கள் அதில் ஓட வேண்டுமே! அவனோ ஏழை; அவனால் இந்த வேலையை எப்படிச் செய்ய முடியும்! இதனோடு அவன் தலையிழப்பான்!" என்று அவர்கள் களிப்புக் கொண்டார்கள்.

அவர்கள் கருதியபடியே செய்யும்படி அரசன் ஐயாசாமிக்குக் கட்டளையிட்டான்.

"ஒரே நாளில் ஒரு கோயிலைக் கட்டி முடிக்க வல்ல நீ இதையும் எளிதில் செய்து முடிக்கலாம். எனவே, நாளை மாலைக்குள் இதைச் செய்து முடிக்க வேண்டும். இல்லாவிட்டால் உன் தலையை நீ இழக்கத்தான் வேண்டும்," என்றான் அரசன்.

ஐயாசாமிக்குப் பெருந் திகில் ஏற்பட்டது. இன்னது செய்வதென்று தோன்றாமல், தலை குனிந்தபடியே ஏதேதோ எண்ணிக்கொண்டே அவன் தன் மனைவியிடம் சென்றான்.

"ஏன் இவ்வாறு கலக்கமாய் இருக்கிறீர்கள்? அரசர் ஏதாவது புது வேலையிட்டாரா?" என்று கேட்டாள் பொன்னி.

ஐயாசாமி விஷயத்தைச் சொன்னான்; அதனோடு நிற்காமல் "உடனே நாம் எங்காவது ஓடி ஒளியத்தான் வேண்டும்!" என்றும் அழுத்தமாகக் கூறினான்.

"என்ன! மறுபடியும் பழைய பாடமே ஒப்பிக்கிறீர்களே! அரசருடைய ஆட்கள் நம்மை எளிதில் விட்டுவிடுவார்களா? நாம் எங்கே போனாலும் நம்மை அவர்கள் தொடர்ந்து வந்து பிடித்துக்கொள்வார்களே! நம் மீது பிழையை வைத்துக்கொண்டு போகலாமா? அரசர் இடும் ஏவலைக் கேட்டு நடப்பதன்றி நமக்கென் வேறு ஒன்றும் உரிமையான செயல் இல்லவே இல்லை," என்றாள் பொன்னி.

"அது சரிதான்! நம்மால் ஆற்றக் கூடிய செயலாக இருந்தால்தானே! நம் ஆற்றலுக்கு ஏற்பவே அன்றோ ஏவல் இருக்கவேண்டும்! இல்லாவிட்டால் அவர் ஏவலை நாம் எப்படிச் செய்து முடிக்க முடியும்? செய்து முடிக்கா விட்டால் ஏவலைச் செய்யாத குற்றம் ஏற்படத்தானே செய்யும்? அப்போது, எப்படியும் உயிருக்கு உலைதானே?" என்றான் ஐயாசாமி.

"வேண்டா! வேண்டா! இதற்காக உறுதி குலைய வேண்டா! உண்டு உறங்குங்கள். அதிகாலையில் எழுந்துபோய் வேலையில் இறங்குங்கள். நம் கடன் பணி செய்து கிடப்பதே! உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ? எனவே, எல்லாம் நன்றாகவே முடியும். கோழைத்தனத்தை விடுங்கள். அஞ்சாமையை மேற்கொள்ளுங்கள்," என்றாள் பொன்னி.

ஐயாசாமி உண்டு உறங்கினான். வழக்கம் போலவே, பொன்னி, அவனை அதிகாலையில் எழுப்பினாள்; "சுறுசுறுப்பாக வேலைக்குச் செல்லுங்கள். வேலை, ஏறத்தாழ முடிவு அடைந்திருக்கிறது. அரண்மனை வாயிலுக்கு எதிரில் கொஞ்சம் மண் கொட்டிக் கிடக்கிறது. மண்வெட்டி கொண்டு அதை நிரவி விடுங்கள். அவ்வளவுதான்! போய் வாருங்கள்!" என்றாள்.

அன்று, தனக்குத் தவறாது வெற்றிதான் என்ற எண்ணத்தோடேயே, அரசன் படுக்கையை விட்டு எழுந்தான். எழுந்ததும், அவன் பார்வை பலகணி (ஜன்னல்) வழியாகச் சென்றது. அகன்ற கொடிகள் படபட வென்று காற்றில் அடித்துக்கொண்டு பறக்கக் கப்பல்கள் இயங்குதலை எதிரே கண்டான் அரசன்; அலைகள் ஓவென்ற ஒலியுடன் எழுந்து வீழ்தலையும் உற்று நோக்கினான். முன்னாள் அங்கே அகழி இல்லை: ஓர் இரவிற்குள் அகழி, அலை, கப்பல் பாய்மரம், கொடி எல்லாம் ஏற்பட்டுவிட்டன! ஐயாசாமி அங்கே வேலை செய்துகொண்டிருப்பதையும் அவன் கண்டான். உண்மையில் பெரு வியப்புற்றான் அரசன். ஆனால், உண்டான பெருவியப்பு உடனே ஓடி மறைந்தது. 'ஐயாசாமியிடம் குற்றம் காண முடியவில்லையே!' என்று அவன் வருத்தந்தான் அடைந்தான்.

"ஐயாசாமிக்குச் செய்து முடிக்க முடியாத செயல் ஏதும் இருப்பதாகவே காணவில்லையே! வீணாக நாம், நம் ஆட்களைக் கோபித்துக் கொண்டு தான் யாது பயன்?" என்று தனக்குள் எண்ணியபடியே, மறுபடியும் தன் ஆட்களைக் கூப்பிட்டு, "அந்தோ! அவனால் செய்யவே முடியாத ஒரு வேலையை நன்றாகச் சிந்தித்து நீங்கள் கூறலாகாதா?

இவ்வாறு கூறிவிட்டுத் தன் கணவனுடைய பயணத்திற்குத் தேவையானவற்றை யெல்லாம் அவள் தயார்செய்தாள்; அவற்றையெல்லாம் அவள் ஒரு பையில் இட்டு அவனிடம் தந்தாள்; அதனோடு நூல் நூற்கும் கதிர்க் கம்பி ஒன்றையும் தந்து, "இதை என் பாட்டியாரிடம் காட்டினால், நீங்கள் என் கணவர் என்பதை அவர் அறிந்து கொள்ளுவார்," என்று சொல்லி, அவன் போகும்வழி இன்னது என்பதையும் காட்டி, அவனுக்கு விடை தந்தாள்.

## வீரரை அடைதல்

ஐயாசாமி பயணமானான். அவன், நகரத்தை விட்டு நெடுந் தொலைவு சென்று, சில வீரர்கள் பயிற்சி செய்து கொண்டிருந்த இடத்தை அடைந்தான்; சிறிது நேரம் அங்கே நின்று, அவர்களை உற்று நோக்கிக் கொண்டிருந்தான். வீரர்கள் சிறிது நேரம் பயிற்சி செய்துவிட்டு, இளைப்பாறுவதற்காகத் தரையில் உட்கார்ந்தார்கள். ஐயாசாமி அவர்களை நெருங்கி, "தோழர்களே, யாது என்று அறிந்த இடத்திற்குச் செல்லும் வழியை அறிவீர்களா? இன்னது என்று அறியாத பொருளை நான் எவ்வாறு அடைய முடியும் என்பதைக் கூறுவீர்களா?" என்று கேட்டான்.

வீரர்கள் அவன் கூறியதை வியப்புடன் உற்றுக் கேட்டார்கள். பின்பு அவர்கள், இவ்விதமான ஒரு செயல் கருதி உன்னை அனுப்பினவர் யார்!" என்றார்கள்

'அரசன்," என்றான் ஐயாசாமி.

"நாங்களும் போர் வீரர்கள் ஆன நாள் முதல், யாதென்றறியாத இடம் குறித்துதான் சென்று கொண்டிருக்கின்றோம்: ஆனால் இன்னும் அதை நாங்

கள் அடைந்தபாடில்லை; இன்னதென்றறியாத பொருளைத்தான் தேடித் திரிகிறோம்: இன்னும் அதை நாங்கள் பெற்றோமில்லை. அப்படியிருக்க, நாங்களெப்படி உனக்கு உதவி செய்ய முடியும்?" என்றார்கள் அவர்கள்.

## கிழவியை அடைதல்

ஐயாசாமி அந்தப் போர் வீரர்களோடே சிறிது நேரம் உட்கார்ந்திருந்துவிட்டு, மறுபடியும் தன் பயணத்தை மேற்கொண்டான்; நெடு நேரம் நடந்து சென்று, இறுதியில், ஒரு காட்டை அடைந்தான்; அங்கே ஒரு குடிசையைக் கண்டான்; அக்குடிசைக்குள் நுழைந்தான். குடிசையில் வயது முதிர்ந்த ஒரு கிழவி இருந்தாள். அவள் பல வீரர்கட்குத் தாய் என்பதை ஐயாசாமி கேட்டுணர்ந்தான். அவள் சணல் நூல் நூற்றுக்கொண்டே அழுதவண்ணமிருந்தாள்; அவ்வாறு நூற்கும்போது அறுபட்ட இழையைத் தன் வாய் எச்சில் தொட்டு ஒட்டாமல், கண்ணீரையே தொட்டு ஒட்டிவந்தாள். கிழவி, ஐயாசாமியைப் பார்த்ததும், "நீ ஏன் இங்கே வந்தாய்?" என்று அதட்டி வினவினாள். ஐயாசாமி அவளிடம் கதிர்க் கம்பியைக் கொடுத்துத் தன்னைத் தன் மனைவி அனுப்பியதாகக் கூறினான்.

கிழவி, உடனே தணிவு கொண்டு, அவன் வரலாற்றைக் கூறுமாறு கேட்டாள். தான் பொன்னியை மணந்தது, இருவரும் நகரத்திற்குச் சென்று வாழ்ந்து வந்தது, தான் வருந்தி வேலை செய்துவந்தது, அரண்மனையில் தான் செய்தது, அங்கே ஒரு கோவில் கட்டியது, கப்பல்கள் ஓடும் அகழி ஒன்று வெட்டியது, யாதென்றறியாத இடத்திற்குச் சென்று இன்னதென்றறியாத பொருளைக் கொண்டு வரவேண்டும் என்று அரசன் விடுத்தது ஆகிய எல்லாவற்றையும்

ஐயாசாமி வகுத்து விளக்கமாகக் கூறினன். கிழவி, இறுதி வரையில் ஐயாசாமி கூறியவற்றையெல்லாம் பொறுமையோடு கேட்டாள். அவளுடைய அழுகையும் ஓய்ந்தது. "காலம் கண் திறந்தது!" என்று அவள் தனக்குள் சொல்லிக்கொண்டு, "நல்லது! தம்பி, உட்காரு. நான் உனக்குக் கொஞ்சம் சிற்றுண்டி கொண்டுவருகிறேன், சாப்பிடு," என்று சொல்லி உள்ளே சென்று சில தின்பண்டங்களைக் கொண்டுவந்து வைத்தாள்.

## கிழவி கூறிய வழி

ஐயாசாமி அவற்றைத் தின்று முடித்ததும், அவன் இன்னது செய்யவேண்டும் என்று கூறினுள் கிழவி.

"இதோ பார்! இஃது ஒரு நூலுருண்டை! இதை வாங்கிக்கொள்; இதை உனக்கு முன்னல் உருட்டி விட்டு, இது போகும் வழியைப் பின் தொடர்ந்து போ; கடலினை அடையும் வரையில், நீ போய்க்கொண்டேயிருக்கவேண்டும். கடலை யடைந்ததும் ஒரு பெரிய நகரம் தோன்றும். அதற்குள்ளே புகுந்து செல். அதன் மறு பக்கத்து எல்லையை அடைந்தால், அங்கே ஒரு பெரிய வீடு இருக்கும். அவ் வீட்டில் ஓர் இரவு தங்குவதற்கு இடம் கேட்டுத் தங்கியிரு. நீ தேடி வந்த பொருளை அங்கே பெறுவாய்."

"ஆமாம் பாட்டி! குறித்த பொருள் இதுதான் என்று நாம் எப்படி அறிவது?" என்று கேட்டான் ஐயாசாமி.

"எந்த ஒரு பொருளுக்குத் தம்முடைய தாய்தந்தையர்க்குக் கீழ்படியாதவரும் கீழ்ப்படிகின்றனரோ, அந்தப் பொருளே அதுவாகும். அதைக் கண்டதும், உடனே எடுத்துக்கொண்டு அரசனிடம் செல். ஆனல்

அரசன் அதைக் கண்டதும், 'அது சரியான பொருளன்று என்பான். இது சரியான பொருளில்லாவிட்டால் இதைச் சின்னபின்னப்படுத்திவிட வேண்டும், என்று நீ சொல்லி விட்டு, அதைப் புடைத்துக்கொண்டே ஆற்றுக்குக் கொண்டுபோய்ச் சின்னபின்னமாக்கித் தண்ணீருக்குள் எறிந்துவிடு. அப்போது உன் மனைவியை நீ மீண்டும் அடைவாய். என் கண்ணீரும் உலர்ந்து போகும்," என்றாள் கிழவி.

## பொருளை அடைதல்

ஐயாசாமி முதியாளிடம் விடை பெற்று, நூலுருண்டையைத் தனக்கு முன்னே உருட்டி விட்டு, அதைப் பின்தொடர்ந்து சென்றான். அது, கடலை யடையும் வரையில் உருண்டுகொண்டே சென்றது. கடலருகில் ஒரு நகரம் இருந்தது. அதன் மறு பக்க எல்லையில் ஒரு பெரிய வீடு இருந்தது. ஓர் இரவு அதில் தங்குவதற்கு ஐயாசாமி ஆணை பெற்றுத் தங்கினான்; அங்கே படுத்துத் தூங்கிக் காலையில் எழுந்தான். அப்போது, எழுந்துபோய் அடுப்பிற்கு விறகு வெட்டி வருமாறு தந்தை மகனைத் துயிலுணர்த்தும் ஒலி கேட்டது. ஆனால், மகன், தந்தை சொல்லைப் பொருட்படுத்தவே யில்லை. "அவசர மில்லை; இன்னும் நேரம் இருக்கிறது," என்று சொல்லிவிட்டுப் படுக்கையிலேயே கிடந்தான்; "பையா, எழுந்திரு! உன் தந்தையாருக்கு உடலெல் லாம் வலியாய் இருக்கிறதாம். அவ்வாறு இருப் பதால், அவர் போக நீ பார்த்திருக்கலாமா? எழுந்திரு! நேரமாகிறது," என்று தாயும் மகனை எழுப்பினாள்.

ஆனால், அவன் ஏதோ முணுமுணுத்துவிட்டு மறுபடியும் தூங்கவே தலைப்பட்டான். அவன், கண்ணை

மூடினனே இல்லையோ, தெருவில் ஏதோ இடி இடிப்பது போன்ற ஒலி எழுந்தது, அவ் வொலியைக் கேட்டதும் அவன் குதித்தெழுந்து, தன் துணியை வரிந்து கட்டிக்கொண்டு தெருவிற்கு ஓடினன். ஐயாசாமியும் விரைந்தெழுந்து, 'தாய் தந்தையர்க்கும் கீழ்ப்படியாத மகனையும் கீழ்ப்படுத்திய அந்த ஒலி யாது?' என்பதை அறிவதற்காக அவனைப் பின்தொடர்ந்தோடினன். தெரு வழியே ஒருவன் நடந்து போய்க்கொண்டிருந்தான். அவன் இடுப்பில் ஏதோ ஒரு பொருள் கட்டப் பட்டிருந்தது. அது மிகப் பெரியதாய் இருந்தது. அதை அவன் குறுந் தடிகளால் அடித்துக்கொண்டே சென்ருன். அதுவே இடி முழக்கம் போன்ற ஒலியை எழுப்பியது. அவ் வொலியே தந்தைதாயார்க்கும் கீழ்ப்படியாத மகனைக் கீழ்ப்படியச் செய்தது. அதைக் கண்டதும், ஐயாசாமி அதன் அருகே சென்று, அதை நன்ருக உற்றுநோக்கினன். அது, வட்ட வடிவமாக ஒரு பெரிய தொட்டி போன்று இருந்தது. அதன் வாய்ப்புறம், தோலால் மூடப்பட்டிருந்தது. 'இது யாது?' என்று அதை அடிப்பவனை ஐயாசாமி கேட்டான்.

"ஒரு முரசு" என்று அவன் சொன்னன்.

"இதன் உள்ளே என்ன இருக்கிறது?" என்று ஐயாசாமி கேட்டான்.

"ஒன்றுமில்லை! வெறு முரசு தான்" என்ருன் அதை அடிப்பவன்.

"உண்மையாகவா ?"

"ஆம்! உண்மையாகத்தான்!"

## முரசைக் கவர்தல்

ஐயாசாமிக்கு அது வியப்பாய் இருந்தது. அதைத் தன்னிடம் கொடுக்குமாறு ஐயாசாமி கேட்டான்.

ஆனல், 'அவன் முடியாது' என்ருன். எனவே, அவனைக் கேட்பதை விட்டுவிட்டு, அவனேடேயே ஐயாசாமி சென்ருன். நாள் முழுவதும் ஐயா சாமி அவனை விடாமல் பின்தொடர்ந்தான். கடைசி யாக முரசடிப்பவன் படுத்துத் தூங்கிவிட்ட பிறகு, ஐயா சாமி அவனிடமிருந்து அந்த முரசை மெதுவாக அவிழ்த்துக்கொண்டு ஓட்டம் பிடித்தான், அது பெரியதாக இருந்தாலும் எடுத்துச் செல்வதற்கு மிகவும் இலேசாகவே இருந்தது. ஓடு ஓடு என்று ஓடிக் கடைசியில் ஐயாசாமி தன்னுடைய நகரத்திற்குத் திரும்பி வந்தான். அவன் தன் மனைவியைப் பார்க்க வீட்டிற்குச் சென்ருன். வீட்டில் அவள் இல்லை. அவன் நகரை விட்டுப்போன மறுநாளே அரசன் அவளைக் கைப்பற்றிக்கொண்டான். எனவே, ஐயாசாமி, அரண்மனைக்குச் சென்று, "யாதென்று அறியாத இடத்திற்குச் சென்று இன்னதென்று அறியாத பொருளைக் கொண்டுவரப் போனவன் அந்தப் பொருளுடன் வந்துவிட்டான் என்று அரசனிடம் கூறுமாறு அரசனுடைய ஆட்களுக்குக் கூறினன்.

## அரசனிடம் முரசு

அவர்கள் அரசனிடம் சென்று கூறினர்கள். ஆனல், அரசன் அவனை மறு நாள் வருமாறு கூறும்படி ஆட்களுக்குத் தெரிவித்தான்;

ஆனல், ஐயாசாமி, "அரசர் விரும்பியதை நான் இன்றே கொண்டுவந்திருக்கிறேன் என்று சொல்லுங்கள். அரசர் வெளிவந்து என்னைப் பார்க்கட்டும். இல்லாவிட்டால், நானே அரசரிடம் போவேன்," என்ருன்.

அரசன் வெளியே வந்து, "நீ எங்கே போயிருந் தாய்?" என்று ஐயாசாமியைக் கேட்டான்.

ஐயாசாமி தான் போயிருந்த இடம் இது வென்று கூறினன்.

"அது சரியான இடமன்று. அஃதிருக்கட்டும்! நீ என்ன கொண்டுவந்திருக்கிருய்?" என்று அரசன் கேட்டான்.

ஐயாசாமி முரசத்தைச் சுட்டிக் காட்டினன். ஆனல், அரசன் அதைக் கண்ணெடுத்துப் பாராமலே, "அது சரியான பொருளன்று," என்ருன்.

"இது சரியான பொருளன்று என்ருல் இதைச் சின்னபின்னப்படுத்திப் போடுவோம்! இதைப் பிசாசு கொண்டு போகட்டும்!" என்ருன் ஐயாசாமி.

இவ்வாறு கூறிவிட்டு, ஐயாசாமி அதை அடித்துக் கொண்டே அரண்மனைக்கு வெளியே சென்ருன். அதை அடிக்கத் தலைப்பட்டானே இல்லையோ உடனே அரசனுடைய படைவீரர்கள் அவனைப் பின்தொடர்ந்து சென்று, அவனுக்கு வணக்கம் புரிந்து, அவன் ஏவலைக் கேட்டு நடக்கக் கைகட்டி வாய்பொத்தி நின்ருர்கள்.

"ஐயாசாமியோடு போகவேண்டாம்!" என்று உரத்த குரலில் அரசன் பலகணி வழியாகப் படைவீரர்களைப் பார்த்துக் கத்தினன். ஆனல், அவன் கத்தலைப் பொருட்படுத்தாமல், அவர்கள், ஐயாசாமி முன் செல்ல, அவனைப் பின் தொடர்ந்து சென்ருர்கள்.

## மனைவியின் மீட்சி

அதைக்கண்ட அரசன் ஐயாசாமியின் மனைவியை அவனிடம் அழைத்துக் கொண்டுபோய் விட்டுவிடும்படி ஆட்களுக்குக் கூறிவிட்டுத் தானே ஐயாசாமியிடம் சென்று அந்த முரசைத் தன்னிடம் கொடுத்துவிடும்படி கேட்டான்.

"அது முடியாது! இதைச் சின்னபின்னப்படுத்தி ஆற்றில் எறிந்துவிடவேண்டும் என்பது தான் நான் பெற்ற ஏவல்," என்றான் ஐயாசாமி.

இவ்வாறு கூறிவிட்டு, அவன் அந்த முரசோடு ஆற்றில் இறங்கினான். படை வீரர்கள் அவனோடேயே சென்றார்கள். அதன் மறுகரையை அவர்கள் அடைந்ததும் அவன் முரசைச் சுக்கல் சுக்கலாகச் சிதைத்து வெள்ளத்தில் வீசி எறிந்தான். பிறகு எல்லாப் படை வீரர்களும் வந்த வழியே திரும்பி ஓடிவிட்டார்கள்.

ஐயாசாமி தன் மனைவியை அழைத்துக்கொண்டு சென்று தன் குடிசையை அடைந்தான். அது முதற்கொண்டு, அரசன் அவனைத் துன்புறுத்துவது இல்லை. எனவே, ஐயாசாமியும் அவன் மனைவியும் அன்புற்று, இன்புற்று வாழ்ந்து வந்தார்கள்!

# முதியோர் இருவர்

## தேனனும் பூவனும்

முதியோர் இருவர், காசி யாத்திரை செய்து, இறைவனை வணங்கி, வழிபாடு செய்ய எண்ணினர். அவருள் தேனன் செல்வம் மிகுதியும் உடையவர்; பூவன் அவ்வளவு செல்வம் உடையவர் அல்லர்.

## தேனன்

தேனன் ஒழுக்கம் விழுப்பமாகக் கொண்டவர்; எடுத்த செயலை முடிப்பதில் கண்ணும் கருத்தும் உடையவர்; உறுதியான உள்ளம் பெற்றவர். குடிப்பதோ, சுருட்டுப் பிடிப்பதோ, பொடி போடுவதோ, பிறரைப் புறங்கூறுவதோ ஒன்றும் அவர் தம் வாழ்க்கையில் செய்ததே இல்லை. இரு முறை அவர் மதுராந்தகம் ஊராண்மைக் கழகத் தலைவராய்ப் பணியாற்றினர். அப் பணியை விட்டு நீங்கியபோது, கணக்கு வழக்குகளெல்லாம் இம்மியளவும் பிசகாதிருந்தன. அவருடைய குடும்பம் மிகப் பெரியது. இரண்டு மைந்தர்களும், மணம் நிறைவேறிய பேரன் ஒருவனும் அவரோடு வாழ்ந்து வந்தனர். நோயில்லா உடலும், நீண்ட தாடியும், கூன் வளையாத உடற்கட்டும் அவர் பெற்றிருந்தார். வயது அறுபது ஆன பின்புதான் அவருடைய தாடி சிறிது நரைக்கலாயிற்று.

## பூவன்

பூவன் பணக்காரர் என்றும் சொல்வதற்கில்லை; ஏழை என்றும் சொல்வதற்கில்லை. தச்சு வேலை செய்துவந்த அவர், தள்ளாமை மிகுதியால் அதை

விடுத்துக் கோழிக்குஞ்சுகள் வாங்கி வளர்க்கத் தலைப்பட்டார். அவருடைய மைந்தர்கள் இருவர்களுள் ஒருவன் வேலை தேடித் திரிந்துகொண்டிருந்தான்; மற்றொருவன் அவரோடு வீட்டு வேலைகளைக் கவனித்து வந்தான். சில வேளைகளில் அவர் குடிப்பது வழக்கம் என்பது உண்மைதான். பொடி போடும் வழக்கமும் அவரிடம் இருந்தது. பாட்டுப் பாடுவதில் அவருக்கு விருப்பம் மிகுதியும் உண்டு. ஆனால், அவர் அமைதியே உருவமானவர். மனைவி மைந்தர்களோடும், அக்கம் பக்கத்தாரோடும் அவர் சண்டை சச்சரவின்றியே வாழ்ந்துவந்தார். குட்டையான வடிவமும், கறுத்த நிறமும், சுருண்ட தாடியும் உடைய அவருடைய தலை மட்டும் தேனனார் தலையே போன்று வழுக்கை பெற்றிருந்தது.

**விரதம்**

இருவரும், நெடுநாட்களுக்கு முன்பே, ஒன்று சேர்ந்து காசிக்குப் போய்வரவேண்டுமென்று விரதமெடுத்துக் கொண்டனர். ஆனால், தேனனார்க்கு ஒழிவே கிடைப்பதில்லை. எப்போதும் ஏதாவது வேலை அவருக்கு இருந்துகொண்டே இருக்கும். ஒரு வேலை முடிந்ததும் மற்றொரு வேலையை அவர் தொடங்குவார்; முதலில் தம்முடைய பேரனுக்குத் திருமணம் முடிக்க வேண்டியவராயிருந்தார். அதைஅவர்செய்து முடித்தார். பின்பு, தம் இளைய மகன் போர்க் களத்திலிருந்து திரும்பி வருங் காலத்தை அவர் நோக்கியிருந்தார்; அதன் பின்பு ஒரு வீடு கட்டத் தொடங்கினார்.

**உரையாடல்**

ஓய்வு நாள் ஒன்றில் முதியோர் இருவரும் அவ் வீட்டிற்கு வெளியே ஒரு மரத்துண்டின்மேல் உட்கார்ந்துகொண்டு பேசத் தலைப்பட்டனர்.

"நல்லது. தேனு! நம்முடைய விரதத்தை எப்போதுதான் முடிப்பது?" என்று பூவனர் கேட்டார்.

தேனனர் தம் முகத்தைச் சுளித்தார்.

"சிறிது பொறுத்துத்தான் அதைப்பற்றி கவனிக்கவேண்டும். இந்த ஆண்டில் எனக்குப்பொறுக்க முடியாத செலவு ஏற்பட்டுவிட்டது. இந்த வீட்டை மூவாயிர ரூபாயில் கட்டி முடித்து விடலாம் என்று தொடங்கினேன். இது வரையில் ஐந்தாயிரம் செலவாயிற்று. ஆனல், வீடோ முடிந்தபாடில்லை. அடுத்த ஆண்டு பிறக்கும் வரையில் நாம் பொறுத்திருப்போம். கடவுளருளால், அடுத்த ஆண்டின் தொடக்கத்தில், தவருமல் நம்முடைய விரதத்தைப் பூர்த்தி செய்து விடலாம்," என்ருர் தேனனர்.

"அதென்னவோ! காலதாமதம் செய்யாமல் இப்பொழுதே புறப்படவேண்டும் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. குளிர்ச்சியுடைய இதுவே மிகச் சிறந்த கால மன்ருே!" என்ருர் பூவனர்.

"காலம் சிறந்ததுதான்! ஆனல் வீடு என்னவது? எவ்வாறு இதைக் கட்டி முடிக்காமல் விட்டு விட்டு வருவது?"

"இதைப் பார்த்துக்கொள்ள வேறு ஒருவரும் இல்லைபோலப் பேசுகிருயே! உன்னுடைய மூத்த மகன் இதைப் பார்த்துக் கொள்ளமாட்டானே?"

"என் மூத்த மகனு! நன்ருய்ச் சொன்னுய் அவனை நான் நம்ப முடியாது. சில வேளைகளில் அளவுக்குமேல் குடித்துவிடுகிருனே!"

"என்ன அப்பா! நாம் இறந்துபோனால் நம்மோடேயே மற்றவர்களும் இறந்து போவார்களா! நம்முடைய துணையில்லாமல் அவர்கள் வாழ மாட்டார்களா! உன் மூத்த மகனை இதில் ஈடுபட்டுச் சிறிது பழக்கம் அடையட்டுமே!"

"உண்மைதான் என்றாலும், ஒருவர் தொடங்கிய ஒன்றை எப்படியாவது தாமே முடிக்க வேண்டும் என்று ஆசைப்படுவதுதானே இயற்கை!"

"சே! சே! நாம் தொடங்கும் எல்லாவற்றையும் நாமே செய்து முடித்து விடுவோம் என்று எப்போதும் நினைக்கவே கூடாது. ஒன்று சொல்கிறேன் கேள்! பொங்கல் விழாவை முன்னிட்டு வீட்டிற்கு வெள்ளையடிக்கவும் அலங்காரங்கள் செய்யவும் என் வீட்டுப் பெண்டிர்கள் தொடங்கினர். இந்தப் புறம் ஒன்று செய்யவேண்டி யிருந்தது; அந்தப் பக்கம் ஒன்று செய்ய வேண்டியிருந்தது. எல்லாவற்றையும் முற்றும் அவர்களால் செய்து முடிக்க முடியவில்லை. என்னுடைய மூத்த மருமகள் புத்திசாலி. அவள் சொன்னதைக் கேட்டால் நீயே வியப்படைவாய்! "நாம் எல்லாவற்றையும் ஒழுங்காகச் செய்து முடித்து விடுவோமோ மாட்டோமோ, பொங்கல் விழா, நம்மை எதிர்பாராமல் வந்துவிட்டுப் போகத்தான் போகிறது. இல்லையெனில், அது வருவதற்குள் நாம் ஒருபோதும் தயாராகவே இருக்க முடியாது. அதுபற்றி நாம் அதற்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம்." என்றாள் அவள்.

தேனனார் ஆழ்ந்து சிந்தித்தார்.

"நானோ இந்த வீடு கட்டும்பொருட்டு ஏராளமாகச் செலவு செய்துவிட்டேன். வெறுங் கையோடு

யாத்திரை செய்வது என்பது கூடாத செயல். நம்முள் ஒவ்வொருவருக்கும் ஆயிரம் ரூபாயாவது வேண்டாவோ! ஆயிரம் ரூபாய் என்பது, என்ன மாங்காயா, புளியங்காயா?''

அது கேட்ட பூவனூர் வெடி சிரிப்புச் சிரித்தார்.

"ஏண்டா அப்பா! எனக்கிருக்கும் சொத்தைப் போல் பத்து மடங்கு சொத்து உன்னிடம் இருக்கிறது! இருந்தும், பணம் பணம் என்கிறாய்! சும்மா சொல், எப்போது புறப்படலாம் என்று! என்னிடமோ இப்போது ஒரு காசும் இல்லை. ஆனால், அதற்குள் போதுமான பணம் தயார் செய்கிறேனா இல்லையா பார்!''

தேனூருக்குச் சிரிப்பு அடக்க முடியவில்லை.

"கோபித்துக் கொள்ளாதே! அவ்வளவு பணக்காரன் என்று உன்னை நான் நினைக்கவேயில்லை. இருக்கட்டும்! அவ்வளவு பணம் உனக்கு எங்கிருந்து கிடைக்கும்?''

எங்கிருந்து கிடைக்குமா! என் குடும்பத்தவர் வைததிருக்கும் சில்லறைகளை யெல்லாம் பிராய்கிறேன். கோழிக் குஞ்சுகள் வளர்ந்திருக்கின்றன: சிலவற்றை விற்றுவிடுகிறேன். என் அண்டைவீட்டுக்காரன்தான் அவற்றை வாங்கிக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் எப்போது ஏற்படுமோ என்று காத்துக் கொண்டிருக்கிறானே!''

"அவைகள் இப்போது முட்டையிடத் தொடங்கினால் நீ பெரிதும் வருந்தமாட்டாயா?''

"வருத்தமா! நண்பா, அதுதான் கிடையாது! என்னுடைய பாவங்கள் பொருட்டு அல்லாமல், என் வாழ்க்கையில் எந்த ஒன்றற்கும் நான் எப்போதும் வருத்தம்

அடைந்ததே இல்லை. உயிரைவிட உயர்ந்த பொருள் உலகத்தில் வேறு ஒன்றுமே இல்லையே!"

"உண்மைதான்! ஆனால் வீட்டு விவகாரங்களை அசட்டை செய்வது நல்லது ஆகாதே!"

"அப்படியானால் நம்முடைய உயிரை அசட்டை செய்யலாமா? அது மிகவும் கெடுதல் ஆயிற்றே! நாமோ, காசிக்குப் போய்வரவேண்டும் என்று விரதம் எடுத்துக்கொண்டுவிட்டோம். வா, போய் வரலாம். அசட்டை செய்யாமல் இப்போதே புறப்படுவோம்; வா!"

## புறப்பட முடிவு

பூவனார் தம் நண்பனார் உள்ளத்தைத் தம்வயமாக்குவதில் வெற்றி பெற்றுவிட்டார். நன்றாகச் சிந்தித்துப் பார்த்துவிட்டு, மறுநாள் காலையில் தேனனார் பூவனார் வீட்டிற்கு வந்துசேர்ந்தார்.

"நீ சொல்வது முற்றும் சரி! நாம் புறப்படுவோம். வாழ்வும் சாவும் இறைவன் வசப்பட்டன. நாம், உயிரோடும் உடல் வன்மையோடும் இருக்கும் இப்பொழுதே போய்வருவதுதான் தக்கது."

ஒரு வாரம் கழிந்தது. அவர்கள் புறப்படச் சித்தமானார்கள் தேனனார் தம்மிடம் இருந்த பணத்தில் இரண்டாயிரம் ரூபாயைத் தம் மனைவியிடம் கொடுத்துவிட்டு, ஓராயிரம் ரூபாய் எடுத்துக்கொண்டு புறப்படத் தயாரானார்.

பூவனார், கோழிக் குஞ்சுகளுள் பலவற்றை விற்றதில் எழுநூறு ரூபாய் கிடைத்தது. மற்றத்

தொகையைக் குடும்பத்தாரிடமிருந்து அவர் பிரிந்து விட்டார்: தம்முடைய இறுதிக் கடன்களுக்கு என்று சேர்த்து வைத்திருந்த பணம் முழுவதையும் அவர் மனைவியார் அவரிடம் கொடுத்து விட்டார். அவருடைய மூத்த மருமகளும் தன்னிடம் இருந்ததையெல்லாம் கொடுத்துவிட்டாள்.

தேனனார் தம் மூத்த மகனிடம் இன்ன இன்ன, இப்படி இப்படிச் செய்யவேண்டும் என்று வரிசைக் கிரமமாகக் கூறினார்; நெற்பயிரை எப்போது அறுவடை செய்வது, எருவை எப்படி வண்டியில் ஏற்றிக் கொண்டுபோய் வயலில் சேர்ப்பது, அரைகுறையாக இருந்த வீட்டின் கூரையை எப்படிக் கட்டி முடிப்பது என்றெல்லாம் அவனிடம் ஒவ்வொன்றாக அழுத்தம் திருத்தமாக வகுத்து விளக்கினார்; ஒவ்வொன்றையும் பலப்பல முறை எண்ணிஎண்ணிப் பார்த்து, மறந்து போகாமல் ஒழுங்காக அவனிடம் கூறி முடித்தார்.

பூவனாரோ, விற்றன போக எஞ்சிய கோழிகளையும் குஞ்சுகளையும் தீனிபோட்டுக் காப்பாற்றிவருமாறு தம் மனைவியிடம் கூறினாரே அன்றி, வீட்டு விவகாரங்களைக் குறித்துத் திட்டமாக ஒன்றுமே சொல்லவில்லை. "தேவையானவற்றுள் எதை எப்படிச் செய்ய வேண்டும் என்பதை நீங்களே அறிவீர்கள்; நீங்களெல்லாம் வயதுவந்தவர்கள்; உங்களுக்கு எது சிறந்தது என்று படுகிறதோ அதை எவ்வாறு செய்து கொள்ளவேண்டும் என்பதை நீங்களே அறிவீர்கள்,'' என்ற அளவில்தான் பூவனார் தம் குடும்பத்தவரிடம் கூறினார்.

எனவே, இருவரும் பயணத்திற்கு ஆயத்தமானார்கள். அவர்களுடைய குடும்பத்தவர் அவர்க

ளுக்குச் சோற்று முடிச்சும், துணிமணிகளின் மூட்டையும் கட்டிக்கொடுத்தார்கள்.

**புறப்பாடு**

சலவை ஆடைகள் அணிந்துகொண்டு இருவரும் புறப்பட்டனர். ஊரின் எல்லைப்புறம் வரையில் குடும்பத்தார் அவர்களுடன் வந்து வழிவிட்டனர்.

**பூவனுர் உள்ளம்**

பூவனுர் உவகையோடு வீட்டைவிட்டுக் கிளம்பினுர். ஊரைக் கடந்தவுடன் தம் வீட்டு விவகாரங்கள் எல்லாவற்றையும் அவர் அடியோடு மறந்துவிட்டார். அவருடைய கவலையெல்லாம் தம் நண்பரை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது, எவ்வாறு மகிழ்விப்பது, அவரிடம் கடுகடுத்த மொழி கூருமல் எவ்வாறு தம்மைப் பாதுகாத்துக் கொள்வது, எவ்வாறு காசியை அடைவது, நல்லபடியாகவும் இனிமையாகவும் எவ்வாறு திரும்பி வீட்டை அடைவது என்பனவே. வழியே போகும்போது, இறைவனைப் பற்றிய துதி பாடல்களைத் தமக்குத் தாமே பாடிக்கொள்வது, இல்லாவிட்டால் தம்முடைய நினைவிற்கு வரக்கூடிய அடியவர்கள் வரலாறுகளைத் தம் மனத்திற்குள்ளே எண்ணிப்பார்ப்பது—இவ்வளவே பூவனுர் செய்துவந்தார். வழியில் யாரையாவது சந்தித்தாலும், இரவில் எங்கேயாவது தங்கினுலும் பிறர் மனம் நோகாதபடி பேசுவதும், நடந்து கொள்வதும், கடவுளைப்பற்றிய நன் மொழிகளைக் கூறுவதும் தவருமல் அவர் போற்றிவந்தார். எனவே, இன்பமாகவே அவர் பயணம் செய்து வந்தார். ஒன்று மாத்திரம் அவரால் விலக்க முடியவில்லை. பொடி போடாமல் அவரால் இருக்க இயலவில்லை. பொடிடப்பியை வேண்டுமென்றே

வீட்டில் வைத்துவிட்டுத்தான் அவர் புறப்பட்டார். ஆனால், பொடிமீது வைத்திருந்த ஆசையை அவரால் விடவே முடியவில்லை. யாராவது எதிர்ப்பட்டவரிடம் அவர் ஒரு சிட்டிக்கை பொடி கேட்டு வாங்கிப் போட்டுக் கொள்ளுவார்; அடிக்கடி தம் நண்பரை விட்டுப் பின் தங்கிவிடுவார். தம்மை அவர் திரும்பிப்பார்க்கிறாரா என்று சோதனை செய்வதற்காக அன்று; பின் தங்குவதெல்லாம் ஒரு சிட்டிக்கை பொடியை மூக்கில் ஏற்றுவதற்கே.

## தேனனார் உள்ளம்

தேனனாரும் ஒழுங்கோடும் உறுதியான உள்ளத்தோடுமே வழி நடந்தார். தவறொன்றும் செய்யாமலும், பயனில்லாத மொழிகள் பேசாமலும் அவர் சென்றார். ஆனால் அவருடைய உள்ளம் பூவனார் உள்ளம்போல் அவ்வளவு இலேசாகவே இல்லை. குடும்பக் கவலைகள் அவர் உள்ளத்திற்குப் பெருஞ் சுமையாக இருந்தன. வீட்டு விவகாரங்கள் என்ன ஆயினவோ என்று அவர் மிகவும் கவலை கொள்வார். "மகனிடம் இதைச் சொல்ல மறந்துவிட்டேனே; அதைச் சொல்ல மறந்துவிட்டேனே" என்று அடிக்கடி அவர் எண்ணுவார்; "கத்தரிச் செடியைச் சரியாக அவன் நட்டு முடிப்பானா? வண்டியில் எருவை ஏற்றிக்கொண்டுபோய் வயலில் கொட்டியிருப்பானா? நான் சொன்னபடி எல்லாவற்றையும் ஒழுங்காகச் செய்து முடிப்பானா? 'இப்படித்தான் செய்யவேண்டும்' என்று அவனுக்குக் கூறலாமா, அல்லது 'நாமே செய்யலாமா' என்று நினைந்து மிகவும் கவலைப்படுவார்.

## வழி நடை

முதியோர் இருவரும் ஐந்து வாரங்கள் வரை கடந்துசென்றனர். அவர்கள் அணிந்திருந்த மிதியடிகளும் தேய்ந்துபோயின. நெல்லூரை அடைந்ததும் அவர்கள் அவற்றை வீசி எறிந்துவிட்டுப் புது மிதியடிகளை வாங்கி அணிந்து கொண்டனர். வீட்டை விட்டுப் புறப்பட்டது முதல், உணவிற்கும் தங்குமிடத்திற்கும் அவர்கள் தங்கள் கைப் பணத்தையே செலவழித்து வந்தார்கள். ஆனால் ஏலூரை அடைந்ததும் அங்கே இருந்தவர்கள் எல்லோரும் போட்டி போட்டுக்கொண்டு தங்கள் தங்கள் வீட்டில் வந்து அவர்கள் விருந்தினராகத் தங்கவேண்டும் என்று அவர்களை வேண்டி அழைத்தனர். உணவிற்கென்று அங்கே இருப்பவர் எப்போதும் காசு வாங்குவதே இல்லை. அவர்களுக்கு உணவு அளித்ததோடு நில்லாமல், பயணத்திற்குப் பயன் படுமாறும் அவர்களுடைய பைகளில் பழங்களும் பலகாரங்களும் அவர்கள் போட்டு நிரப்பி அனுப்பினர்.

இவ்வாறு ஐந்நூறு கல் தூரம் அவர்கள் பெருஞ் செலவில்லாமலே பயணம் செய்தனர். ஆனால் கோதாவரியைத் தாண்டிப் பார்வதி புரத்தை அடைந்ததும், அவர்களுக்கு உணவுக் கஷ்டம் ஏற்பட்டது. அங்கே பயிர் ஒன்றும் அப்போது விளையவில்லை. ஆயினும், அவர்களுக்குத் தங்குவதற்கு மாத்திரம் காசு இல்லாமல் அவ்வூரார் இடம் அளித்தனர்; காசில்லாமல் உணவு தர எவரும் முன் வரவில்லை. சில சமயங்களில், காசு கொடுத்தாலும் உணவு கிடைப்பதில்லை. இரண்டு மூன்று ஆண்டுகளாக மழை பெய்யாது போனதால், அங்கே நல்ல விளைவு இல்லை. அந்த ஆண்டில் அடியோடு விளைவு இல்லாது போயிற்று. பணக்காரர்கள் எல்லோரும் தங்கள் வீடு

களிலிருந்த சாமான்களை யெல்லாம் விற்றுவிற்று ஏழைகளாயினர். பணமில்லாவிட்டாலும் ஓரளவு நிம்மதியாக வாழ்ந்துவந்தவர்களும், சிறிதளவு கூட உணவு கிடைக்காமையால் திக்கற்றவராயினர். ஏழை களுள் பெரும்பான்மையோர் அந்த ஊரைவிட்டு அயல் ஊர்களுக்குச் சென்றுவிட்டனர். அப்படிச் செல்லாதவர்கள் எல்லோரும் பிச்சை எடுத்து அலைந்து பட்டினியால் மிகவும் தத்தளித்தனர். குளிர் காலம் வந்ததும் அவர்கள் தவிடும் தழைகளும் தின்று வாழவேண்டியவராயினர்.

ஓரிரவு அந்த முதியோர் இருவரும் அந்த ஊரில் தங்கினர். அதிக விலை கொடுத்து இரண்டு மூன்று நாளைக்கு வேண்டுமளவு ரொட்டி வாங்கிக்கொண்டு வெயிலுக்குப் பயந்து அதி காலையிலேயே அவர்கள் பயணமாயினர். எட்டு மைல் தூரம் நடந்து சென்ற பிறகு, ஓர் ஓடை தென்பட்டது. அங்கே ரொட்டி யைத் தண்ணீரில் தோய்த்துத் தோய்த்துத் தின்று விட்டுச் சிறிது நேரம் அவர்கள் களைப்பாறினர். அப்போது பூவனூர் தம்முடைய பொடி மட்டையை எடுத்தார். தேனனூர் அது கண்டு தம் முகத்தைச் சுளித்தார்.

“இந்தப் பீடைப் பழக்கத்தை நீ ஏன் விட்டுத் தொலைக்கலாகாது?” என்றார் தேனனூர்.

அதுகேட்ட, பூவனூர், தம் கையை விரித்து, “பொடி போடுவது கெட்ட பழக்கம்தான் என்று நன்றாகத் தெரிகின்றது. ஆனால், அதை என்னால் விட முடியவில்லையே! என்னைவிட அது மிகவும் வலிமை யுடையதாயிருக்கிறதே!” என்றார்.

பின்பு, அவர்கள் எழுந்து நடக்கத் தலைப்பட் டனர். ஏழெட்டு மைல்கள் கடந்த பிறகு அவர்கள்

ஒரு பெரிய ஊரை யடைந்தனர். ஆனால் அங்கே நிற்காமல் அதனுள் புகுந்து அதைக் கடந்து சென்றனர். அப்போது வெயில் மிகவும் கடுமையாக இருந்தது. பூவனாருக்குச் சிறிதுநேரம் தங்கவேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. அவருடைய நாவும் உலர்ந்து போயிற்று. தண்ணீர் பருகவேண்டுமென்று அவர் கருதினார். ஆனால், தேனனார் நிற்காமல் விர்ரென நடந்துகொண்டே இருந்தார். அவர் நடப்பதில் சமர்த்தர். பூவனாரால் அவரோடு தொடர்ந்து நடக்கமுடியவில்லை.

"கொஞ்சம் தண்ணீர் குடித்தால் நன்றாக இருக்கும்," என்றார் பூவனார்.

"உனக்கு வேண்டுமானால் தண்ணீர் குடித்து விட்டு வா; எனக்குத் தேவையில்லை." என்றார் தேனனார்.

பூவனார் சற்றுத் தயங்கி, "நீ போய்க் கொண்டே இரு. நான் அதோ இருக்கிற குடிசைக்குச்சென்று தண்ணீர் குடித்துவிட்டு வருகிறேன். ஒரு நொடிப் பொழுதில் உன்னை வந்து பிடித்துக்கொள்கிறேன்," என்றார்.

## பசிப் பிணியாளர்

"சரி" என்று தேனனார் சாலை வழியே தனியே நடந்து சென்றார். பூவனார் குடிசைக்கு வந்தார்.

குடிசை மிகச் சிறியது. தரையும் சுவர்களும் மண்ணால் ஆனவை. சுவர்களெல்லாம் கீழே நீல நிறமும், மேலே வெள்ளை நிறமும் பூசப்பெற்றிருந்தன; ஆனால், எங்கே பார்த்தாலும் வெடிப்பும்

உடைப்புமாய் இருந்தன. மண் பூசி அநேக ஆண்டு கள் கழிந்திருக்க வேண்டும். கூரையும் கூட, ஒருபக் கத்தில் அடியோடு பிரிந்து போயிருந்தது. குடிசைக் குப் பின்புறமாகத்தான் வழியிருந்தது. பின் புறத் திலிருந்த தோட்டத்திற்குள் நுழைந்து, குடிசையின் வாயிலைப் பூவனூர் அடைந்தார். அதன் ஒரு பக்கத் தில், சுவரிலிருந்து சரிந்து விழுந்திருந்த மண்மீது கண் திறந்தபடியே ஒருவன் கிடந்தான். வெயில் அவன்மீது நன்றாகத்தான் வீசியது. இருந்தும், ஏனோ, அவன் அங்கேயே செயலற்றுக் கிடந்தான். பூவனூர் அவனைப் பார்த்துக் குடிக்கச் சிறிது தண் ணீர் தரவேண்டும் என்று வேண்டினார். ஆனால், அந்த மனிதன் பதிலொன்றுங் கூறவில்லை.

"ஒன்று, நோயினால் களைப்புற்றிருக்கவேண் டும்; இல்லாவிட்டால், நம்மீது வெறுப்புக் கொண் டிருக்கவேண்டும்," என்று பூவனூர் நினைத்தார்; எனவே, வாயிற் கதவை அணுகி, அதன் பிடி சங் கிலியை ஆட்டினார். உள்ளேயிருந்து ஒரு குழந்தை அழும் ஒலி கேட்டதே தவிர, யாருமே பதில் அளிக்க வில்லை.

"யார்? ...யாரம்மா உள்ளே? ....யாரப்பா உள்ளே?" என்று அவர் பலமுறை கதவைத் தட்டிக் கூப்பிட்டார்.

பதிலொன்றுமே யில்லை.

"ஐயோ! தர்மமே இல்லையா? தெய்வமே!" என்று அவர் மறுபடியும் தம்முடைய கைத்தடியால் தட்டினார். அப்போதும் பதிலொன்றும் வரவில்லை.

பூவனூர் திரும்பிப்போக நினைத்தார். அப்போது கதவின் அப்புறத்திலிருந்து யாரோ குரட்டை விடும் ஒலி கேட்டது.

"இவர்களுக்கு ஏதோ கெட்ட காலம் ஏற்பட்டிருக்கவேண்டும்! உள்ளே சென்று பார்ப்போம்!" என்று சொல்லிக்கொண்டே பூவனூர் கதவை அழுக்கினார். கதவின் உள்ளே தாழிடவில்லை. எனவே, அழுக்கியதும் அது திறந்தது. அவர் உள்ளே சென்றார். படுக்கையறை திறந்தபடியே கிடந்தது. அங்கே, ஒரு விசிப் பலகையின்மேல், கிழவி ஒருத்தி உட்கார்ந்துகொண்டிருந்தாள். அவள் கட்டியிருந்த ஆடை நான்கு முழம்கூட இராது. எதிரில் இருந்த மேஜையின்மேல் தலையை வைத்துக்கொண்டு அவள் கவிழ்ந்திருந்தாள். அவளுக்குப் பக்கத்தில் மெலிந்து, வெளுத்துப்போய், வயிறு முன் தள்ளிய ஒரு சிறுவன் உட்கார்ந்திருந்தான். அவன் ஓவென்று அழுதுகொண்டும், அவள் துணியைப்பிடித்து இழுத்துக்கொண்டும் ஏதோ தரும்படி அவளைத் துன்புறுத்திக்கொண்டிருந்தான். அப்போதுதான் பூவனூர் நுழைந்தார். உள்ளே துர்நாற்றம் வீசிற்று. பூவனூர் சுற்றுமுற்றும் பார்த்தார். அடுப்பின் பக்கத்தில், ஒருத்தி பிணம்போல் படுத்துக்கிடந்தாள். அவளுடைய தொண்டை, நீர் வற்றிப்போய், மூச்சு விடும்போது அடிக்கடி அடைபட்டது. ஒரு காலை மடிப்பதும், ஒரு காலை நீட்டுவதும், ஒருபோது ஒரு பக்கம் புரளுவதும், மற்றொருபோது மற்றொரு பக்கம் புரளுவதுமாக அவள் கிடந்தாள். அவளிடமிருந்துதான் அந்த நாற்றம் வீசியது. அவளுக்குத் துணை புரிவார் யாருமில்லை. அவள், தானாகவே ஒன்றும் செய்யமாட்டாதவளாகக் கிடந்தாள். பூவனூர் உள்ளே பார்த்துக்கொண்டே இருந்தபோது, விசிப் பலகையின் மேல் உட்கார்ந்திருந்த கிழவி தலை தூக்கிப்

பார்த்தாள். பூவனூரைக் கண்டதும், "யாரப்பா நீ? எங்கே வந்தாய்? உனக்கு என்ன வேண்டும்? எங்களிடத்தில் ஒன்றுமில்லை! போய்வா," என்று வருத்தத்தோடும் வெறுப்போடும் அந்தக் கிழவி சொன்னாள்.

அவள் வேற்று மொழியில் பேசினாள் என்றாலும், பூவனூர் அவள் சொல்லியதை உணர்ந்து கொண்டார்.

"சிறிது குடி தண்ணீர் வேண்டியே நான் இங்கே வந்தேன்; உங்களுக்குச் சிறிதும் கருணையில்லையே!" என்றார் பூவனூர்.

"ஐயோ! இங்கே யாருமில்லையே! ஒருவருமில்லையே! கொண்டு வருவதற்கும் ஒரு பாத்திரமில்லை! எங்கேயாவது போயேன்."

"அப்படியா? யாருமே உங்களுக்கு ஆதரவு இல்லையா? அதனால்தான் அதோ கிடக்கும் அந்த நங்கை அப்படிக் கிடக்கிறாளா?" என்று பூவனூர் கேட்டார்.

"இல்லை! ஒருவருமே எங்களுக்குத் துணையில்லை! அதோ வெளியே என் மகன் உயிர் துறந்து கொண்டிருக்கிறான்! இதோ இங்கே நாங்கள் உயிர் துறந்துகொண்டிருக்கிறோம்!"

அந்தச் சிறு பையன் புதிய மனிதரைப் பார்த்ததும் அழுவதை நிறுத்தினான். ஆனால், கிழவி பேசத் தொடங்கியதும் அவளுடைய ஆடையைப்பற்றிக் கொண்டு, "ரொட்டி பாட்டி! ரொட்டி!" என்று கத்திக் கேட்டான்.

பூவனூர், கிழவியிடம் ஏதோ கேட்க வேண்டும் என்று வாய் திறந்தார். அப்போது வெளியே

இருந்த மகன் தத்தித் தள்ளாடிக்கொண்டே குடிசைக்குள் நுழைந்தான்; சுவரைப் பிடித்துக் கொண்டே குடிசைக்குள் நுழைந்தவன், படுக்கையறைக்குள் நுழைய முற்பட்டபோது, அதன் வாயிற்படி தடுத்தபடியால் அதன் முற்பக்கத்திலேயே குப்புற விழுந்தான்; மறுபடியும் எழுந்து விசிப்பலகையை அடையவேண்டும் என்று விரும்பாமல், அங்கே கிடந்தபடியே வாய் குழறிப் பேசத் தலைப்பட்டான்: ஒரு சொல் கூறுவான்; இதற்குள் பெரு மூச்சு விடுவான்; மறுபடியும் ஒரு சொல் கூறுவான்; மிக்க வருத்தத்தோடு மூச்சை உள்ளே இழுப்பான்.

" எங்களை......எல்லாம்........நோய்.......பிடித்து வாட்டுகிறது.......பஞ்சம்!.........அவன்...........பசியால் இறந்துகொண்டு.......இருக்கிறான்."

இவ்வாறு கூறிக்கொண்டே பையன் இருந்த இடத்தை நோக்கிக்கொண்டே அவன் அழத் தொடங்கினன்.

**பசியாற்றுதல் — முதல் நாள்**

பூவனார் தம் முதுகிலிருந்த பையைத் தளர்த்திக் கீழே வைத்தார்; அதைத் தூக்கி விசிப் பலகை மீது வைத்து அவிழ்த்தார்: ஒரு முழு ரொட்டி எடுத்தார்; கத்தி கொண்டு ஒரு துண்டு அறுத்து, அதை அந்த மனிதனிடம் கொடுத்தார். அதை அவன் வாங்கிக்கொள்ளாமல் பையனையும் பெண்ணையும் சுட்டிக் காட்டினன். அவ்வாறு காட்டியது அவர்களுக்குக் கொடுங்கள் என்று கூறியது போன்று இருந்தது.

பூவனுர் அதைப் பையனிடம் நீட்டினர். ரொட்டி மணம் வந்ததோ இல்லையோ, உடனே தன் கைகளை நீட்டி அதை வாங்கி, இரண்டு கைகளாலும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, மூக்கும் இருந்த இடம் தெரியாமல் அழுந்தி மறைந்து போகுமாறு வைத்துப் பையன் அதைக் கடித்தான். அது கண்டதும், அவன் பின் நின்ற சிறுமி ரொட்டியை உற்றுப் பார்த்தாள். பூவனுர் அவளுக்கும் ஒரு துண்டு கொடுத்தார்; பின்பு, மற்ருெரு துண்டு அறுத்து அந்தக் கிழவிக்கும் கொடுத்தார். அவளும் அதைத் தின்ன ஆரம்பித்தாள்.

" இவர்களுடைய வாயெல்லாம் உலர்ந்துபோயிருக்கிறது. சிறிது தண்ணீர் இருந்தால் நன்ருயிருக்கும். இன்றைக்கோ, நேற்ருே—சரியாக நினைவில்லை!—தண்ணீர் கொண்டுவர முயன்றேன்; தொட்டியை எடுத்துக்கொண்டு வெளியே போனேன்; ஆனுல், மயக்கமாக விழுந்துவிட்டேன்; மேலே போக முடியவில்லை. யாரும் கொண்டுபோகாமலிருந்தால் தொட்டி அங்கேயே கிடக்கும்," என்ருள் கிழவி.

" கிணறு எங்கே இருக்கிறது ?" என்று பூவனுர் கேட்டார்.

கிழவி, கிணறு இருக்குமிடத்தைக் கூறினுள்.

பூவனுர் வெளியே சென்று, தொட்டியைத் தேடி எடுத்துக்கொண்டு, கிணற்றுக்குப்போய்த் தண்ணீர் கொண்டுவந்து அவர்களுக்கெல்லாம் குடிக்கக் கொடுத்தார். கிழவியும் அந்தச் சிறுவனும் சிறுமியும் தண்ணீர் குடித்து, மேலும் ரொட்டி சிறிது

தின்றார்கள். ஆனால் அந்த மனிதன்மட்டும் சிறிதுகூட ரொட்டி தின்னவேயில்லை.

"என்னால் ரொட்டி தின்னமுடியாது," என்றான் அவன்.

அதுவரையில் அடுப்பங்கரையண்டை இருந்த நங்கை, பசி மிகுதியால் ஏற்பட்ட களைப்பால் பேச்சு மூச்சு இல்லாமல் இப்படியும் அப்படியும் புரண்டுகொண்டிருந்தாள். உடனே பூவனூர் அவ்வூரிலிருந்த கடைக்குப்போய்க் கொஞ்சம் கோதுமை மாவும், உப்பும், எண்ணெயும் வாங்கிவந்தார். அடுப்பிற்கு விறகு வேண்டியிருந்தது. கோடரியைத் தேடி எடுத்துப் பக்கத்தில் உலர்ந்து கிடந்த ஒரு மரத்தை அவர் பிளந்தார்; அடுப்பு மூட்டினார். சிறுமியும் அவருடன் சமையலுக்கு உதவி செய்தாள். விரைவில் சமையல் முடிந்தது. பட்டினியால் வாடிக் கிடந்த அவர்களெல்லோருக்கும் ஒரு வேளைக்கு வேண்டுமளவு பூவனூர் உணவு தயார் செய்தார்.

மகன் சிறிது உண்டான். கிழவியும் சிறிது சாப்பிட்டாள். இள நங்கையும் இளஞ் சிறுவனும் நிரம்ப வயிறார உண்டு, உடனே படுத்து ஆழ்ந்த தூக்கத்தில் அழுந்தினர்.

## குடும்ப வரலாறு

மகனும் கிழவியும் தங்களுக்கு அந்த நிலை ஏற்பட்டதைச் சொல்லத் தொடங்கினர்:

"இயற்கையாகவே நாங்கள் ஏழைகள். அதனோடு விளைவு ஒன்றும் இல்லாமல் போனதால், நாங்கள் அரும்பாடுபட்டுத் தேடிவைத்திருந்த உணவுப்

பொருள்கள் சென்ற மாதமே அடியோடு ஆய் விட்டன. குளிர்காலம் தொடங்கியபோது வீட்டில் உணவிற்காக ஒன்றுமே இல்லை. எனவே, மான மிழந்து, அக்கம்பக்கத்தாரிடமும் மற்றவரிடமும் சென்று பிச்சை யெடுக்கத் தலைப்பட்டோம். தொடக் கத்தில் அவர்கள் பிச்சை போட்டுவந்தார்கள். ஆனல். நாளடைவில், அவர்கள் எங்கள்மீது சீறி விழுந்தார்கள். சிலருக்கு, உண்மையில் எங்களுக்கு உதவவேண்டும் என்ற எண்ணம் உண்டு. ஆனல், தங்களுக்கே இல்லாதுபோனதால் அவர்களால் ஒன்றும் உதவி செய்ய முடியாதுபோயிற்று. கடைசி யாகப் பிச்சை யென்று எவரையும் கேட்க மிகவும் நாணம் அடைந்தோம்; பலரிடம் கடன்பட்டோம்: பணம், கோதுமை மா, ரொட்டி-இப்படிப் பலப்பல பொருள்கள் கடன் வாங்கி விட்டோம்.”

பிறகு மகன் மட்டும் தன்னைப்பற்றிக் கூற வேண்டி, “ஏதாவது வேலை செய்து கூலி பெறலாம் என்று முயன்றேன்: ஒரு வேலையும் கிடைக்க வில்லை. தங்கள் வயிற்றுப் பிழைப்புக்காக வேண்டி மக்கள் யாவரும் வேலை தேடி அலையலானர்கள். ஒரு நாளைக்கு ஒரு சிறு வேலை கிடைக்கும். அடுத்து இரண்டு மூன்று நாட்கள் ஒரு வேலையும் இராது. கிழவியும் என் மகளும் அயலூருக்குச் சென்று பிச்சை யெடுத்து வந்தனர். ஆனல், கிடைத்த பிச்சையோ மிகமிகக் கொஞ்சமே. ரொட்டி கிடைப் பதே அரிதாயிற்று. எப்படியோ ஒருவாறு உணவு பெற்று வாழ்க்கை நடத்திேம். அடுத்த அறுவடைக்காலம் வரையில் இவ்வாறு காலம் கழிக்கலாம் என்று எண்ணினேம். ஆனல், சென்றமாதம் முதற்கொண்டே யாவரும் ஓர் இம்மியும் கொடுக்க மறுத்துவிட்டனர். போதாக் குறைக்கு எங்களுக்கெல்லாம் ஒன்று மாறி ஒன்ருக நோய் உண்டாயிற்று. எங்கள் நிலை மிக

மிக மோசமாயிற்று. ஒரு நாளைக்குச் சிறிது உணவு கிடைக்கும்; அடுத்த இரண்டு மூன்று நாட்களுக்கு ஒன்றுமே கிடைக்காது. புல்லையும் தழையையும் தின்னத் தலைப்பட்டோம். புல் லுணவோ வேறு என்னவோ, தெரியவில்லை, என் மனைவியை நோய்க்கு உள்ளாக்கியது. அவளால் நடக்கக்கூட முடியாதபடி தளர்ச்சியும் ஏற்பட்டது. நோயிலிருந்து விடுதலை பெற எங்களுக்கு ஒரு வழியும் ஏற்படவில்லை."

பிறகு கிழவி தொடங்கி, "நான் மட்டும் பல்லைக் கடித்துக்கொண்டு கொஞ்சகாலம் பாடுபட்டுவந் தேன். இறுதியாய்ப் பசி மிகுதியால் மிகவும் மெலிந்து போனேன். என் மருமகளும் மிகவும் மெலிந்து திகைப்புற்றாள். 'அண்டை வீட்டுக்காரர்களிடம் போய் ஒரு கவளம் உணவு கேட்டு உண்டுவா" என்று என் மருமகளிடம் எவ்வளவோ சொல்லிப்பார்த்தேன். என் பேச்சைக் காதில் போட்டுக்கொள்ளாமல் ஒரு மூலையில் அவள் சுருண்டு கொண்டாள். மூந்தாநாள் என் தங்கை தன் குழந்தைகளோடும் கணவனோடும் அயலூரிலிருந்து வந்தாள். நாங்கள் பசியாலும் நோயாலும் வருந்துவதை பார்த்து அவள் ஒன்றுமே சொல்லாமல் உடனே போய்விட்டாள். பாவம்! அவள் குழந்தைகளும் அன்று பட்டினி கிடந்தன! நாங்கள் சாவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்," என்றாள்.

## இரண்டாம் நாள்—மூன்றும் நாள்

அவர்கள் வரலாறு கேட்ட பூவனூர், தம் நண்ப ரைச் சென்று அடையவேண்டும் என்ற எண்ணத்தை அறவே விட்டுவிட்டு, அன்றைய இரவு முழுதும் அவர் களோடே தங்கிவிட்டார்; மறுநாள் காலையில் எழுந்

திருந்து, அதைத் தம் வீடு என்றே நினைத்துக் கொண்டு, வீட்டு வேலைகளையெல்லாம் செய்யத் தொடங்கினர்; கிழவியோடு சேர்ந்து ரொட்டி தட்டி வைத்து விட்டு அடுப்பு மூட்டினர்; பிறகு சிறுமியை அழைத்துக்கொண்டு இன்றியமையாத பொருள்களை இரவலாக வாங்கிவர அண்டைவீடுகளுக்குச் சென்றார். ஏன்? அவர்கள் வீட்டில் சமையலுக்குத் தேவையான பாத்திரங்கள் கூடவா இல்லை! பாவம்! அவர்கள் என்ன செய்வார்கள்? சமையல் பாத்திரங்கள், துணிமணிகள் எல்லாவற்றையும் வயிறு வளர்ப்பதற்காக அவர்கள் ஒவ்வொன்றாக விற்றுத் தொலைத்து விட்டார்கள். எனவே, ஒன்றுமே அவர்கள் வீட்டில் இல்லை. அண்டை வீட்டார்களிடம் ஒன்றுமே இரவலாகக் கிடைக்கவில்லை. என்ன செய்வது? தம்மிடமிருந்த பணத்தில் கொஞ்சம் செலவு செய்து சிலவற்றை அவர் வாங்கினர்; சிலவற்றைத் தம் கையினாலேயே ஒருவாறு செய்துகொண்டார். அந் நாள் கழிந்தது; இரண்டு நாட்கள் கழிந்தன; மூன்றாம் நாளும் பிறந்தது. சிறுவன் சிறிது உடல் நலம் பெற்றான். பூவனர் உட்கார்ந்திருந்த போதெல்லாம் அவன் மெதுவாக நகர்ந்துசென்று அவரைக் கட்டியணைத்துக்கொள்ளலானன். சிறுமியும் தெளிவு பெற்று, வேலை செய்யும் ஆற்றல் அடைந்தாள் "தாதா, தாதா" என்று அழைத்துக்கொண்டு பூவனருடன் அவள் வீட்டு வேலைகளைச் செய்யத் தலைப்பட்டாள்.

கிழவி நல்ல உடல் வலி பெற்று அண்டை வீடுகளுக்குப் போய்வரத் தலைப்பட்டாள். அவள் மகனும் சிறிது குணமடைந்து சுவரைப் பிடித்துக்கொண்டு எழுந்திருக்கவும் உட்காரவும் நகரவும் தலைப்பட்டான். அவன் மனைவிமட்டும் எழுந்திருக்கவேயில்லை; இருந்த

போதிலும், மூன்ரும் நாள், சிறிது தன்னுணர்வு பெற்று, 'பசிக்கிறது' என்ருள்.

"வழியில், இவ்வளவு காலம் வீணுக்குவேன் என்று நான் எண்ணவேயில்லையே! இருந்தாலும் இருக்கட்டும்! நான் இனிமேல் புறப்பட்டுப் போக வேண்டும்'' என்று பூவணர் எண்ணினர்.

**சிவராத்திரி நோன்பு**

மூன்று நாட்களாகப் பூவணர் உணவு ஒன்றுமே உட்கொள்ளவில்லை. அவர் வழக்கமாகச் **சிவராத்திரி நோன்பு** மேற்கொள்பவர். சிவராத்திரியோடு அதற்கு முன் தொடங்கி, மூன்று நாட்கள் உண்ணு நோன்பு மேற்கொண்டு, அதற்கு மறுநாள் விடியலில் அவர் பழமும் பலகாரங்களும் உண்டு நோன்பு முடிப்பார்.

"இன்னேரு நாள் இங்கேயே தங்கியிருந்து என்னுடைய உண்ணு நோன்பினை முடித்துக் கொள்வது நலம். கடைக்குப் போய் ஏதாவது வாங்கி வந்து, நல்ல பலகாரங்கள் செய்து, அவர்களோடு உடனிருந்து உண்டு களிப்பது நலம். நாளைய மாலையில் கட்டாயம் புறப்படலாம்,'' என்று பூவணர் எண்ணினர்.

எண்ணியபடியே, அவர் கடைத் தெருவிற்குச் சென்ருர்; சிறிது கோதுமை மாவும் நெய்யும் சர்க்கரையும் வாங்கிக்கொண்டு வந்து, அவற்றைக் கிழவியிடம் கொடுத்தார்; தாமும் அவளுடனிருந்து மறுநாட் காலைக்கு வேண்டும் பலகாரங்கள் செய்தார்.

பொழுது விடிந்ததும் நீராடிவிட்டுப் பூவணர் கோயிலுக்குச் சென்ருர்; ஆண்டவனை வணங்கி

வாழ்த்தினர்; பின்பு வீட்டிற்கு வந்து, அவர்களோடு உடனிருந்து பலகாரங்கள் உண்டு, தம்முடைய உண்ணு நோன்பினை முடித்துக்கொண்டார். அன்று தான் கிழவியின் மருகி **நல்லதங்கை** சிறிது எழுந்து நடக்கத் தலைப்பட்டாள். கிழவியின் மகன் **நல்லதம்பியும்** அன்று வெளியே சென்று வருவதற்குரிய உடல் வலிமை பெற்ருன். கிழவி அவனுடைய அழுக்கடைந்த சட்டைகளை யெல்லாம் தோய்த்து வெளுத்துக் காய வைத்திருந்தாள். நல்லதம்பி க்ஷவரம் செய்துகொண்டு, நீராடிப் பலகாரம் உண்டு. நற்சட்டை யணிந்துகொண்டு, வெளியே சென்றுவரப் புறப்பட்டான். அவனுடைய விளைநிலமும் மேய்நிலமும் ஒரு செல்வக் குடியானவனுக்கு அனுபோக அடமானமாக வைக்கப்பட்டிருந்தன. விதைவிதைத்து விட்டு, நிலங்களை, அவனிடம் நல்லதம்பி அடமானமாக வைத்துவிட்டான். நிலங்கள் நன்கு விளைந்திருந்தன. அறுவடை வரையில் தன் அனுபோகத்தில் அந்த நிலங்களை விட்டு வைக்குமாறு செல்வக் குடியானவனை வெண்டிக்கொள்ளலாம் என்று கருதியே நல்லதம்பி புறப்பட்டான். ஆனல் அன்று மாலையில், அவன் வருத்தம் தேங்கிய முகத்துடன் வீடு திரும்பி வந்தான். அவன் கண்களின் நீர் கலங்கிற்று. பணக்காரன் உள்ளம் அவன் வேண்டுகோளுக்கு இணங்கி இளகவில்லை. "பணம் கொண்டு வந்தால்தான் ஏதாவது பேசலாம்," என்று அவன் கண்டிப்பாகக் கூறிவிட்டான். ஏழை நல்லதம்பி என் செய்வான்? பாவம்!

நல்ல தம்பியின் கண் கலக்கத்தைக் கண்டதும் பூவனூர் எண்ணத்தில் ஆழ்ந்தார். "இவர்கள் இனி மேல் வாழ்க்கையை நடத்துவது எப்படி? மற்றவர்களெல்லோரும் புல்லறுத்துக் காய வைத்துப் போர் போடுவர். இவர்களுடைய மேய்நிலமோ அடமானத்தி

விருக்கிறது! புல் லறுவடை செய்ய இவர்களுக்கோ வழி ஒன்றுமில்லை! இவ் வாண்டில் இயற்கை அன்னை கடைக்கண் செலுத்தி அருள் பொழிந்துள்ளாள். மழை, நன்கு பெய்திருக்கிறது. எங்கும் நல் விளைவு ஏற்பட்டிருக்கிறது, ஆனல், இவர்கள் எதை அறுவடை செய்வது? இவர்களுடைய மூன்று காணி விளைநிலமோ அடமானத்தில் உள்ளது? நான் இவர்களை விட்டுப் பிரிந்தவுடன், பழைய நிலைதான் இவர்களுக்கு ஏற்படும்?"

## உள்ளம் ஊசலாடல்

பூவனர் உள்ளம் ஊசலாடியது. 'காசிக்குப் போகவேண்டுமே!' என்று அவர் ஒரு பக்கம் நினைப்பார்; 'போய்விட்டால் இவர்கள் நிலை யாதாவது?' என்று மற்றோர் பக்கம் நினைப்பார்; இறுதியாக அன்று புறப்படுவதை நிறுத்திக்கொண்டு மறுநாட் காலையில் புறப்பட முடிவு செய்தார்; தாழ்வாரத்தில் படுக்கையை விரித்தார்; வழக்கம்போல் இறைவனை உளமுருகி வாழ்த்தினர்; படுத்தார்; தூக்கம் வரவில்லை. பற்பல எண்ணங்கள் எழுந்தன. எதிர் பாராமல் நான்கு நாட்கள் கழிந்துவிட்டபடியால், மறுநாட் காலையில் எப்படியும் புறப்பட வேண்டுமென்று அவருள்ளம் தூண்டியது. அவர் கையிலிருந்த பணமோ மிகுதியாகச் செலவழிந்துவிட்டது; என்ருலும், அவர்களைப் பிரிந்து போய்விட்டால் அவர்கள் நிலை யாதாவதென்றும் அவருள்ளம் திகைத்தது.

"இதற்கொன்றும் முடிவு ஏற்படாதுபோலிருக்கிறதே! முதலில் சிறிது தண்ணீர் கொண்டுவந்து கொடுத்துவிட்டு, அதனேடு ஆளுக்கொரு ரொட்டித் துண்டும் உண்ணுமாறு உதவி, உடனே புறப்பட்டு விடலாம் என்றே நினைத்தேன். ஆனல், அந்த

நினைவு இப்போது என்னை எவ்வளவு தொலைவில் கொண்டுவந்து சேர்த்துவிட்டது! இவர்களுடைய நிலங்களை அடமானத்திலிருந்து மீட்டுக் கொடுத்தாலொழிய, என் உள்ளம், என்னை மேற்செல்ல வொட்டாதுபோல் தோன்றுகிறதே! அவ்வளவுதானா! இவர்களுக்கு ஒரு பசுவும் வாங்கித் தரவேண்டும்; அறுவடை செய்யும் கோதுமை விளைச்சலை வீட்டிற்குக் கொண்டு வந்து சேர்க்க ஒரு வண்டியும் வாங்கித் தந்தாகவேண்டும். இதேது? ஏ பூவா! வலையில் நன்கு சிக்கிக்கொண்டாயே! ஆழம் தெரியாமல் இறங்கி விட்டாயே! இப்போது என்ன செய்யப் போகிறாய்? நீ வந்த செயல் யாது? மிக நன்றாக இருக்கிறதே உன் செய்கை!"—இவ்வாறெல்லாம் பூவனார் தமக்குள் எண்ணினார்.

படுத்திருந்த பூவனார் எழுந்து உட்கார்ந்தார்; தலையணையாகச் சுற்றி வைத்திருந்த தம்முடைய மேற்சட்டையைப் பிரித்து. அதன் பையில் வாங்கிவைத்திருந்த பொடிமட்டையைப் பிரித்து, ஒரு சிட்டிக்கை பொடி எடுத்தார். பொடி போட்டுக் கொண்டால் முதியோர் மூளை கொஞ்சம் வேலை செய்யும் அல்லவா? எண்ணம் தெளிவாகும் அல்லவா? ஒரு சிட்டிக்கை பொடி நாசிக்குள் சென்றது.

பொடி போட்டுப் பயன் யாது? முடிவு ஒன்றும் ஏற்படவில்லை. எண்ணங்கள் அடுக்கடுக்காக எழுந்து ஓங்கிய வண்ணமே இருந்தன. அன்றாவது, அவர் புறப்பட்டிருக்க வேண்டும். யாது செய்வதென்று அவருக்கு ஒன்றுமே புரியவில்லை. இரக்கமே அவரைத் துணிவுகொண்டு மேற்செல்ல வொட்டாமல் தடுத்தது. என் செய்வார்? பாவம்! மறுபடியும் அவர் மேற்சட்டையைச் சுருட்டினார்; அதைத் தலையின் கீழே வைத்துக்கொண்டு படுத்தார். தூங்க-

வேண்டும் என்று அவருக்கு ஆசைதான். ஆனல், தூக்கம் வந்தால் தானே! எனினும், அப்படியே அவர் படுத்துக்கிடந்தார். கோழிகளும் கூப்பிடத் தொடங்கின. தூக்கம் அவர் தலையைக் கிறுகிறு வென்று சுழற்றியது. திடீரென யாரோ அவரைத் தட்டியெழுப்புவது போன்ற தோற்றம் அவருக்கு ஏற்பட்டது. தூக்க மயக்கத்தில், தம்முடைய முது கில் மூட்டையும் கையில் தடியும் கொண்டு, பயணக் கோலத்துடன் தாம் இருப்பதைக் கண்டார். வீட் டின் கதவு திறந்திருந்தது ; ஆனல் தாராளமாகப் புகுந்து செல்லும் அளவு இன்றிச் சிறிது நெருக் கத்துடன் செல்லும் அளவே திறந்திருந்தது. அத னுட் புகுந்து செல்லத் தலைப்பட்டார் பூவனர் ; அடி யெடுத்து வைத்தார். முதுகிலிருந்த மூட்டை இடுக் கில் அகப்பட்டுக்கொண்டது. அதை விடுவித்துக் கொள்ள முயல்கையில், அவர் காலிலிருந்த செருப்பு மற்றொரு பக்கம் மாட்டிக்கொண்டது. மூட்டையை அவர் இழுத்துப் பார்த்தார். அது வரவில்லை. உண்மையில் அஃது இடுக்கில் மாட்டிக்கொள்ளவே யில்லை. சிறுமியே அதைப் பின்னலிருந்து கெட்டி யாகப் பிடித்துக்கொண்டிருந்தாள். அதனேடு நில்லாமல், “ரொட்டி தாதா, ரொட்டி” என்று அவள் கூவினள். சிறுவன் காலைக் கட்டிக்கொண் டிருந்தான். மகனும் கிழவியும் ஜன்னல் வழியாக அவனை நோக்கிக்கொண்டிருந்தனர்.

சிறிது நேரத்திற்குள் பூவனர் தூக்கத்திலிருந்து தெளிவு பெற்று எழுந்தார் ; பிறர் காதில் நன்கு கேட்குமாறு தாமாகவே பேசத் தொடங்கினர் :

## பூவனர் செயல்கள்

“நாளைய தினம் அவர்களுடைய நிலங்களை அட மானத்திலிருந்து மீட்டுத் தந்துவிடுகின்றேன். அவர்

களுக்குக் குதிரைவண்டி ஒன்றும், சிறுவர்களுக்குப் பசு ஒன்றும், அறுவடையாகும் வரையில் உணவிற்குப் போதுமான கோதுமை மாவும் வாங்கிக் கொடுத்து விடுகின்றேன். இவ்வளவும் செய்தால் தான் நான் காசிக்குச் சென்று ஆண்டவனைக் காண முடியும்; இல்லாவிட்டால் காணவே முடியாது, ஆண்டவன் என் கண்களில் படாமல் ஒளிந்து கொள்வான்."

இவ்வாறு கூறிவிட்டுப் படுத்தார் பூவனூர். தூக்கம் நன்றாக வந்தது. பொழுது நன்கு விடியும்வரையில் அவர் அயர்ந்து தூங்கினூர்; நன்றாகக் கதிரவன் எழுந்ததும் செல்வக் குடியானவனிடம் சென்றூர்; அடமானத் தொகையைக் கொடுத்து நிலத்தை மீட்டார்; அரிவாள் ஒன்றும் விலைக்கு வாங்கினூர். பாவம்! அவர்கள் என்ன செய்வார்கள்? சாப்பாட்டின் பொருட்டு அவர்கள் அரிவாட்களையும் விற்றுவிட்டார்கள். அரிவாளோடு பூவனூர் வீடு வந்து சேர்ந்தார். அரிவாளை நல்லதம்பியிடம் கொடுத்துப் புல்லறுத்து வருமாறு ஏவி விட்டு, மறுபடியும் அவர் வெளியே சென்றூர். ஏன்? வீடு திரும்பி வரும்போது வரி வாங்கும் ஒருவன் குதிரை வண்டியை ஏலம் போட்டுக்கொண்டிருந்தான். அக் குதிரை வண்டியை அவர் ஏலத்தில் எடுத்தார். அதற்குப் பணம் சிறிது குறைந்தது. அதை எடுத்துப்போக வந்தவர், முன்னெச்சரிக்கையாகப் புல்லுக்கும் ஏற்பாடு செய்துவிட்டுச் சென்றூர்; பணம் கட்டிக் குதிரை வண்டியை ஓட்டி வரும்போது ஒரு மூட்டை கோதுமை மாவினையும் வண்டியில் வாங்கிப் போட்டுக்கொண்டார். இன்னும் பசு ஒன்று தான் மிச்சம். அதையும் குறித்து அவர் தேடிக்கொண்டே வந்தார். அப்போது இரண்டு நங்கைமார் ஏதோ இந்தி மொழியில் அவரைப்பற்றிப் பேசிக்கொண்டனர். இந்தி மொழியும் அவருக்குச் சிறிதளவு தெரி

67 57



MADURA TAMIL SANGAM

யும். அவர்கள் பேச்சு அவருக்கு நன்றாகப் புரிந்தது.

"நல்ல தம்பிக்கோ, கிழவிக்கோ அவரைப் பற்றி முதல் முதல் ஒன்றுமே தெரியாது போலிருக்கிறது. அவரொரு சாமானிய வழிப்போக்கரென்றே அவர்கள் நினைத்தார்கள். பாவம்! அவர் தண்ணீர் கேட்டுப் பருக வந்தார்! கடைசியில் அங்கேயே தங்கிவிட்டார்! அவர்களுக்காக அவர் என்னென்ன பாடுபட்டார்! இன்று காலையில்தான் ஒரு குதிரை வண்டிகூட வாங்கச் சென்றாராம். இப்படிப்பட்ட வள்ளல்கள் உலகில் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள்! ஆனால், அவர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். அவ் வள்ளலைப் பார்க்கக் கொடுத்து வைக்க வேண்டாவா! அவரைப் பார்த்தால் நமக்கு அளவில்லாத மகிழ்ச்சி உண்டாகும்."

இரு நங்கையரும் தம்மைக் குறித்துப் புகழ்தலைக் கேட்டவுடன், பசு வாங்குவதை நிறுத்திக் கொண்டு, குதிரை வண்டியுடன் பூவனார் விரைவாக வீடு வந்து சேர்ந்தார். குதிரையையும் வண்டியையும் பார்த்ததும், நல்ல தம்பிக்கும் மற்றவர்க்கும் உண்டான வியப்பிற்கு அளவே யில்லை. தங்களுக்காகவே இருக்கலாம் என்று எண்ணினார்கள்; என்றாலும், கேட்டுத் தெரிந்துகொள்ள அவர்களுக்குத் துணிவு வரவில்லை. நல்லதம்பி கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தான். வந்தவன், "இக் குதிரை வண்டியை எங்கே பெற்றீர்கள்?" என்று பணிவாகக் கேட்டான்.

"ஏன்? விலைக்கு வாங்கிவந்தேன். ஏலத்தில் மலிவாகக் கிடைத்தது! புல் அறுத்துக்கொண்டு வந்திருக்கிறா யல்லையோ? கொஞ்சம் புல்லெடுத்துக்

குதிரைக்குப் போடு. இந்த மூட்டையை உள்ளே எடுத்துக்கொண்டு போ.''

நல்லதம்பி, குதிரையை அவிழ்த்துக்கொண்டு போய்க் கொட்டகையில் கட்டிப் புல் போட்டான்; மூட்டையை, உள்ளே கொண்டுபோய் வைத்தான்.

பொழுது போயிற்று. எல்லோரும் படுத்துக் கொண்டார்கள். பூவனூர் மட்டும் சாலையின் பக்கமாக வெளியே படுத்துக்கொண்டார். எல்லோரும் நன்றாக அயர்ந்து உறங்கினர். பூவனூர் எழுந்தார்; மூட்டை முடிச்சுக்களை யெல்லாம் நன்றாகக் கட்டிக் கொண்டார்; மேற் சட்டையைப் போட்டுக்கொண்டார்; தடியைக் கையில் எடுத்தார்; மூட்டையைத் தோளில் போட்டுக்கொண்டு, தேனனூர் சென்ற வழியை நோக்கி நடந்தார்.

பூவனூர் சென்ற தூரம் மூன்று மைல்களுக்கு மேலிருக்கும். அப்போது பொழுது விடியத் தொடங்கிற்று. அவர் ஒரு மரத்தடியில் உட்கார்ந்தார்; பையை அவிழ்த்துப் பணத்தை எண்ணினார். எழுபது ரூபாயும் 13 அணைக்களுமே இருந்தன.

### பூவனூர் மீட்சி

''இந்தத் தொகையை வைத்துக்கொண்டு காசிக்குப் போய்த் திரும்புவது என்பது முடியாத செயலாகும். நான் போகாவிட்டாலும் தேனன் காசிக்குப் போய்த் தீருவான்; என் பெயர் சொல்லிக் கர்ப்பூரம் ஏற்றுவான். என்னைப் பொறுத்தமட்டில் இப் பிறப்பில் நான் காசிக்குப் போவது குதிரைக்கொம்பு தான். காசிக்குப் போய் ஆண்டவனைக் காண்பேன் என்று அவன் மீது ஆணையிட்டுக்கொண்டது உண்மைதான். ஆனல், இறைவன் அருளே வடிவமான

வன். நல்ல வேளையாய் அவன்மீது ஆணை செய்தேன். அவன் மன்னித்தருளும் இயல்புடையவன். நான் என் ஆணையை நிறை வேற்ற விட்டாலும் அவன் என்னை மன்னித்து விடுவான்.''

இந்த முடிவிற்கு வந்ததும் பூவனூர் எழுந்தார்; பையைத் தோளில் மாட்டிக் கொண்டார்; வந்த வழியே திரும்பித் தம்முடைய ஊரை நோக்கி நடக்க லானார். வழியில் தங்கிய வூர் வழியாகச் சென்றால் யாரேனும் தம்மைக் கண்டுபிடித்து விடுவர் என்றெண்ணி, அவர் அதைச் சுற்றிக்கொண்டு வேகமாக வீடு நோக்கி நடந்தார். வீட்டிலிருந்து வெளியேறின போது வழி நடப்பது அவ்வளவு எளிதாகத் தோன்ற வில்லை. தேனனுருடன் விரைவாக நடப்பது பூவனூர்க் குத் தொல்லையாகவே இருந்தது. ஆனால், இப் போதோ, இறைவனருளால் தளர்ச்சி யொன்றும் தோன்றவே யில்லை. நடப்ப தென்பது அவருக் கென்னவோ குழந்தை விளையாட்டுப் போலவே இருந்தது. கையில் தடியைச் சுழற்றிக்கொண்டே அவர் நாளொன்றுக்கு ஏறக்குறைய முப்பது மைல் வீதம் நடந்து சென்றார்.

அவர் தம்முடைய வீட்டை யடைந்தபோது அறுவடையெல்லாம் முடிவடைந்திருந்தது. அவரைக் கண்டதும் அவருடைய குடும்பத்தார் களிக்கூத்தாடி னர். இடையில் நிகழ்ந்ததை யெல்லாம் அறிய வேண்டும் என்று அவர்கள் எண்ணினர்; "அவர் எப்படிப் பின்தங்கிவிட்டார்? காசிக்குப் போகாமல் ஏன் திரும்பிவிட்டார்?'' பூவனூர் பதிலொன்றும் கூறவேயில்லை.

"நான் காசிக்குப் போகவேண்டும் என்று ஆண்டவன் விரும்பவில்லை. வழியில் பணத்தைச் செலவு செய்துவிட்டு, நண்பனைக் கெடுத்தொல்லையில்

பின் தங்கிவிட்டேன். ஆண்டவன்மேல் ஆணையிட்டு வேண்டுகிறேன்; என்னை இனிமேல் ஒன்றும் கேட்டுத் துன்புறுத்த வேண்டா," என்று மட்டும் பூவனார் கூறினார்.

மீதியிருந்த பணத்தைப் பூவனார் தம்முடைய மனைவியிடம் கொடுத்தார்; பிறகு, வீட்டு விவகாரங்களைப் பற்றிக் கேட்டார். எல்லா விவகாரங்களும் நன்றாகவும் ஒழுங்காகவும் நடைபெற்றிருந்தன. செய்ய வேண்டியன யாவும் செவ்வையாக முடிந்திருந்தன. ஒன்றையும் யாரும் புறக்கணிக்கவில்லை. யாவரும் அமைதியோடும் ஒற்றுமையோடும் வாழ்ந்திருந்தனர்.

பூவனார் திரும்பி வந்துவிட்ட செய்தியை, அன்றைய தினமே தேனனார் குடும்பத்தார் கேள்விப்பட்டனர். தேனனாரைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும் என்று விருப்பம் உண்டாவது அவர்கட்கு இயல்புதானே! எனவே, அவர்கள் விரைந்து வந்து, பூவனாரைக் கேள்விமேல் கேள்வி கேட்டனர். அவர்களுக்கும் பூவனாரிடமிருந்து முன்னைய பதிலே கிடைத்தது.

"தேனன் விரைவாக நடப்பவன். மஹா சிவ ராத்திரிக்கு மூன்று நாட்களுக்கு முன்பே நாங்கள் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்துவிட்டோம். மறுபடியும் அவனைப் பிடித்து விடலாம் என்று நான் எண்ணினேன். ஆனால் எதிர்பாராத நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. கையிலிருந்த பணத்தையெல்லாம் நான் எப்படியோ இழந்துவிட்டேன். மேற்செல்லுவதற்கு வேறு வழி ஏற்படவில்லை. எனவே நான் திரும்பி விட்டேன்," என்ற அளவில்தான் பூவனார் பதில் கூறினார்.

தேனனுருடைய குடும்பத்தார் வியப்பும் திகைப்பும் அடைந்தனர்; "பூவனர் அறிவுடையவர் என்று எண்ணினேமே! இந்த நிகழ்ச்சியில் இவ்வளவு முட்டாள்தனமாக நடந்து கொண்டிருக்கிறாரே! 'காசிக்குப் போவேன்' என்று உறுதியாகக் கூறிவிட்டுச் சென்றவர் அதையடையாமல் திரும்பி வந்துவிட்டாரே! வழியில் பணம் செலவழிந்து போயிற்றாம்! இவையெல்லாம் விந்தையாகவே இருக்கின்றன." சில நாட்கள் வரையில் இவ்வாறு பூவனுரைக் குறித்து வேடிக்கை செய்துகொண்டே இருந்வனர். ஆனல் நாள் செல்லச் செல்ல, அவர் கதை பழங்கதையாய்விட்டபடியால், அவர்கள் வேடிக்கை செய்வது நின்று போயிற்று. பூவனுரும் தாம் போய்வந்த செய்தியை மறந்தே போனர்.

மறுபடி, அவர் முன்போலவே வீட்டு விவகாரங்களை யெல்லாம் செய்யத் தொடங்கினர்; தம்முடைய மகனைத் துணையாகக்கொண்டு மழைக் காலத்திற்குத் தேவையான விறகைக் காட்டிலிருந்து வெட்டிக்கொண்டு வந்து சேர்த்தார்; நெல்லைக் குற்றிவைத்துக்கொண்டார்; வீட்டில் பழுதாயிருந்த இடங்களையெல்லாம் செம்மைப் படுத்தினர்; கோழிக் குஞ்சுகளைக் கண்ணுங் கருத்துமாய்க் கவனித்தார். இவ்வாறு எல்லாம் அமைத்துகொண்டதும் அவருக்கு மகன் துணை இனித் தேவையில்லை யென்று தோன்றிற்று. எனவே, மகனை ஏதாவது வேலையில் அமரும்படி அவர் ஏவினர்.

### தேனனர் திகைப்பு

பூவனர் பின் தங்கியதும், தேனனர் சிறிது தூரம் நடந்து சென்றார்; பின்பு அவர் வருகையை எதிர்பார்த்தவண்ணம், சிறிது நேரம் ஓரிடத்தில் நின்று

பார்த்தார்; அதன்பின் உட்கார்ந்தார்; அப்படியே படுத்தார்; சிறிது நேரம் உறங்கினார்; பின்னர் எழுந்தார்; மறுபடியும் உட்கார்ந்தவண்ணம் எதிர்பார்த்தார்; அவர் வருகையை நோக்கியவண்ணம் கண் கொட்டாமல் பார்த்தார்: கண்ணும் பூத்துப் போய் விட்டது. சூரியன் மேற்கில் இறங்கிக் கொண்டேயிருந்தான். பூவனாரோ அவர் கண்ணில் படவில்லை.

"ஒருவேளை,நான் தூங்கிக்கொண்டிருந்தபோது என்னைப் பார்க்காமல் பூவன் போய்விட்டானோ? யாராவது இவ் வழியே வண்டி ஓட்டிக் கொண்டு போகின்றவர் அவனை அதில் ஏற்றிக்கொண்டுபோயிருக்கலாம். வண்டியிலிருந்தவன் என்னைப் பார்த்திருக்க முடியாது. எப்படி என்னைக் கவனிக்காமச் அவன் போயிருக்க முடியும்? திரும்பித் சென்று அவனைப் பார்க்கலாமா? ஒருவேளை.... எனக்கு முன்னால் போயிருந்தால்...ஒருவரை ஒருவர் முற்றிலும் காணாது போகவே நேரும். அஃது இன்னும் தொல்லையாகத் தான் முடியும். எப்படியும் இரவில் ஓரிடத்தில் அவன் தங்கத்தான் வேண்டும். அவ்விடத்தில் அவனைக் கண்டுபிடித்து விடலாம்," என்று எண்ணிக்கொண்டு தேனனார் எழுந்து நடந்தார்.

தேனனார், வழியில் ஓர் ஊரை அடைந்ததும் இருட்டிவிட்டது. அந்த ஊர்க் காவற்காரனைப் பார்த்துப் பூவனார் அடையாளங்களைக் கூறி, அவர் கிடைத்தால் தம்மிடம் அழைத்து வரும்படி சொல்லி விட்டு, அவர் ஒரு குடிசையில் தங்கினார். ஆனால், அன்றிரவு பூவனார் வந்தால்தானே! தேனனார் மறு நாட் காலையில் எழுந்து பயணமானார். வழியில் எதிர் வந்தவர்களை யெல்லாம், "வழுக்கைத் தலையுடைய ஒரு கிழவரை வழியில் கண்டதுண்டா?" என்று அவர்

வினவினர். யாரும் அப்படிப்பட்ட ஒருவரைக் கண்டதாகக் கூறவில்லை.

"இருக்கட்டும்! அவன் எங்கே அகப்படாமல் போகிறான்! காசியில் எப்படியும் அவனைக் காண்பேன். கண்டதும் என்னைப் பிரிந்தது தகுதியா என்று கேட்பேன்," என்று நினைத்த வண்ணம் தேனனர் நடந்து சென்றார். இரண்டு நாட்கள் கழிந்ததும், அவர் ஓர் ஊரில் ஒரு சத்திரத்தில் தங்கினர். காசிக்குச் செல்லும் மற்றொருவர் அங்கே தங்கியிருந்தார். பூவனரைப்பற்றி அவருக்கு ஏதாவது தெரியுமா என்று தேனனர் கேட்டார். அவரும் பூவனரைப்பற்றி ஒன்றும் கூற இயலவில்லை. மறுநாள் இருவருமாகச் சேர்ந்து காசி நோக்கிச் சென்றனர். அன்றிரவு ஒரு சத்திரத்தில் அவ்விருவரும் தங்கினர். பொழுது விடிந்ததும் மற்றவர் தம்முடைய பணப்பை களவு போய் விட்டதென்றும், அதில் ஐந்து பத்து ரூபாய் நோட்டுக்களும் எட்டுரூபாய்களும் இருந்தன என்றும், மேல் செல்வதற்கு ஒரு காசும் தம்மிடம் இல்லையே என்றும் கலங்கிக் கூறினர். தேனனர் அதை நம்பவில்லை. தேனனரிடம் அன்று அவர் வழியில் இரண்டு ரூபாய் கடன் வாங்கிக்கொண்டனர். வழியில் ஏழைகளுக்கும் அவர் ஒரு காசும் கொடுக்கவில்லை. ஆனல், சிறிது நேரத்தில் தேனனர் தம்மைத் தாமே நொந்துகொண்டனர். "மற்றவருடைய தராதரங்களைக் நினைப்பதற்கு நமக்கென்ன உரிமையிருக்கின்றது? அவற்றைப்பற்றி நினைப்பதும் பாவமாகும். இனிமேல் அவற்றைப் பற்றி நினைக்கமாட்டேன்." ஆனல் உடனே எண்ணங்கள் மாறின. "அவர், பணத்தில் பேராசைபிடித்தவராகக் காணப்படுகிறார். அவர் முகத் தோற்றம் ஐயத்தையே உண்டாக்குகிறது. பணம் களவு போயிற்று என்பதை என்னல் நம்பவே முடியாது. யாம் இருவரன்றி வேறு யாரும் பக்கத்தில்

இல்லை. பணம் களவு போயிற்று என்று அவர் சொன்னதெல்லாம் கற்பனையே," என்று தேனனர் பலப்பல எண்ணினர். அன்று இருவரும் மறுபடிம் ஒன்று சேர்ந்தே வழி நடந்தனர். அவரை விட்டு விலகி விடவேண்டும் என்று தேனனர் எவ்வளவோ முயன்று பார்த்தார். அவரோ தேனனரை விட்டு நீங்கவேயில்லை. கடைசியாக இருவரும் காசியை யடைந்தனர்; ஒரு சத்திரத்தில் தங்கினர். தம்முடைய பணத்தை அவர் ஒருவேளை திருடிக்கொள்வாரோ என்று தேனனர் எண்ணினர்; உண்மையில் அவருடைய பணப்பை களவாடப் பட்டிருந்தால் தம்முடைய பணப்பையும் அவ்வாறே ஏன் களவாடப் படாது போயிற்று என்று ஐயுற்றார்; பணப்பையைப் பற்றிய கவலை தேனனரை வாட்டியது. அன்றிரவெல்லாம் அவருக்குத் தூக்கமே வரவில்லை, பொழுது விடிந்தது. இருவரும் கோயிலை நோக்கி நடந்தனர்.

## காசியில் தேனனர்

தேனனர் கோயிலுக்குள் நுழைந்தார். கூட்டம் மிகுதியாக இருந்தது. கோயிலின் உள்ளும் புறமும் எல்லா விடங்களிலும் விளக்குகள் அழகாக எரிந்து கொண்டிருந்தன. தேனனரால் சிவலிங்கத்தின் அருகே செல்லவே முடியவில்லை. எவ்வளவோ முயன்றும், கூட்டம் அவருக்கு இடம் கொடுக்க வில்லை. எனவே, அவர், அவர்கள் தலைக்குமேலே தம் கழுத்தைத் தூக்கிச் சிவலிங்கத்தை உற்று நோக்கினர். சிவலிங்கத்திற்குப் பின்னல், அதற்குச் சிறிது மேலே, சுவரில் ஒரு சித்திர விளக்குத் தென் பட்டது. அங்கே அவ் விளக்கின் அடியில் அவருக்கு ஒரு வியப்பான காட்சி தோன்றிற்று. அஃது யாது?

**பூவனார் காட்சி**

ஒரு கிழவர்! வழுக்குத் தலை! பளபள வென்று தலை ஒளி செய்து; பூவனார் போலவே அக் கிழவர் தென்பட்டார்.

" அவனைப் போலவே இருக்கிறது! ஆனால் அவனாக இருக்கவே முடியாது! அவன் எனக்கு முன்னால் போயிருக்க முடியாது!" என்று தேனனார் நினைத்தார்.

இவ்வாறு அவர் எண்ணிக்கொண்டிருக்கையில், அக் கிழவர், சிவலிங்கத்திற்கு முன்னால் வந்து, கீழே விழுந்து வணங்கி, பின்பு எழுந்து நின்று, கை கூப்பிக் கண்மூடித் தியானிக்கத் தலைப்பட்டார். சிறிது நேரம் கழிந்ததும், அவர் தம் தலையைத் திருப்பிக் கூட்டத்தை உற்று நோக்கினார்.

" அவன் பூவன்தான்! கறுத்துச் சுருண்டு தொங்கும் தாடியும், கன்னப் பக்கங்களில் நரைத்த மயிரும், அழகிய புருவங்களும், கண்களும், மூக்கும், முகத்தில் மலர்ச்சியும் அவனுடையனவே, ஆம்,! அவன்தான்!"

பூவனாரைக் கண்டதும் தேனனாருக்கு அளவில்லாத மகிழ்ச்சி உண்டாயிற்று. தமக்கு முன்னால் அவர் எப்படி வந்திருக்க முடியும் என்று தேனனார் வியப்பு அடைந்தார்.

"பூவா நீ நல்ல செயல் செய்தாய்!" என்று தேனனார் நினைத்தார்.

"பூவன் மிகவும் கெட்டிக்காரன்! எப்படியோ கூட்டத்தைத் தள்ளிக்கொண்டு சிவலிங்கத்தின் அருகே போய்விட்டான்! அவன் குறுக்கு வழியாக

எனக்கு முன்னே வந்திருக்கவேண்டும்! யாரோ நல்லவர்கள் அவனுக்குக் குறுக்கு வழி காட்டியிருக்க வேண்டும்! இருக்கட்டும்! அவன் எங்கே போய்விடுகின்றான்? எல்லோரும் வெளியே செல்லும்போது, அவனும் வெளியே வந்துதானே ஆகவேண்டும்! அப்பொழுது, அவனைக் கையும் பிடியுமாகப் பிடித்துக்கொள்வேன். மறுமுறை கோயிலுக்குப் போகும் போது, அவன் உதவியால் நானும் சிவலிங்கத்தின் அருகில் முன் சென்று நிற்பேன்.''

தேனனார் உற்று நோக்கியபடியே நின்றார். அவரை விடாது பிடிக்கவேண்டும்என்றுஎண்ணினார்; ஆனால் தீபாராதனை முடிந்ததும், கூட்டத்தில் இருந்த ஒவ்வொருவரும் சிவலிங்கத்தின் அருகில் சென்று தொழுகை ஆற்ற முன் தள்ளிக்கொண்டு சென்றனர் அதனால், தேனனார் அங்கிருந்து தள்ளுண்டார். தேனனார் கண்ணில் பூவனார் படவில்லை இதற்குள் தேனனாருடைய எண்ணம் தம்முடைய பணப்பையின் மீது சென்றது. அதை எவரேனும் கவர்ந்து கொள்வார்களோ என்று அவர் திகில் அடைந்தார்; அதைத் தம் இரண்டு கைகளாலும் இறுகப் பற்றிக் கொண்டு, அங்கிருந்து நெருக்கித் தள்ளிக்கொண்டு வெளியேறுபவர்களோடு முக்கி முரண்டி வெளியே திறந்த வெளியிடத்தில் வந்து நின்றார். நீண்ட நேரம் அவர் பூவனாரைத் தேடினார். கூட்டம் கலைந்தது. பலர் அத் திறந்த வெளியில் உட்கார்துகொண்டு தேங்காயும் பழமும் பொரியும் கடலையும் தின்னத் தலைப்பட்டனர். நாலா பக்கங்களிலும் தேனனார் சுற்றிச் சுற்றி அலைந்தார். ஆனால், பூவனார் மட்டும் எங்கும் காணப்படவில்லை. எனவே, அவர், தாம் தங்கியிருந்த சத்திரத்தை அடைந்தார். அவருடன் வந்த நண்பர் சத்திரத்திற்கு வரவில்லை. அவர், தாம்வாங்கிய

கடனையும் கொடுக்கவில்லை. தேனனூர் தனியாகவே அவ் விரவைக் கழித்தார்.

மறுநாட் காலையில் தேனனூர் கோயிலுக்குச் சென்றார். ஆனால் அவருக்கு முன்பாகவே கோயிலுக்குள் பெருங் கூட்டம் கூடிவிட்டது. சிவலிங்கத்தின் அருகில் செல்வதற்குத் தேனனூர் தம்மால் ஆனவரையில் முயன்று பார்த்தார். அவர் முயற்சி பயன் அளிக்கவில்லை. ஒரு தூணைச் சார்ந்து நின்று, அவர் பிரார்த்தனை செய்தார். அப்போது, முன்னாள்போலவே பூவனூர் சித்திர தீபத்தின் அடியில் முதலில் தோன்றிப் பின் சிவலிங்கத்திற்கு முன்பு வந்து நின்று, இரண்டு கைகளையும் தலைக்கு மேல் உயரக் கூப்பிக்கொண்டு, " அரும் பொன்னே ! மணியே......." என்ற பாட்டை உரக்கப் பாடிப் பிரார்த்தித்தார். கூட்டத்தார் எல்லோரும் பாட்டைக் கேட்டுச் சந்தடி செய்யாமல் பொம்மைகள் போல நின்றனர்.

" இன்றைக்கு அவனை விடமாட்டேன் ! எப்படியாவது பிடித்துக்கொள்ளுவேன். இப்போது கூட்டம் அமைதியாக இருக்கிறது. இதுதான் ஏற்ற காலம் !" என்று தமக்குள் எண்ணிக்கொண்டு, மெதுவாகக் கூட்டத்திற்கிடையே புகுந்து, சிவலிங்கத்தின் அருகில் தேனனூர் சென்று சேர்ந்தார். ஆனால் பூவனூர் அங்கே இல்லை ! அங்கிருந்து அவர் எப்படியோ நழுவிவிட்டார். தேனனூர் முயற்சி விழலுக்கிறைத்த நீராயிற்று.

மூன்றாம் நாள் முன்னாளைவிட இன்னும் முன்பாகவே தேனனூர் கோயிலுக்குச் சென்றார். ஆனால், அன்றும் அவருககு இடம் கிடைக்கவில்லை. பூவனூர் மட்டும் எப்படியோ சிவலிங்கத்தின் முன்பாக நின்று அழகாகப் பாடிக்கொண்டிருந்தார். ஏதோ ஒன்றை, மேலே பார்ப்பதுபோல், தலையை மேலே நிமிர்த்தி,

அவர் உற்று நோக்கியவண்ணம் இருந்தார். அவருடைய வழுக்கைத் தலை பளபள வென்று ஒளி செய்தது.

"இன்றைக்குப் பூவன் என்னைவிட்டு எப்படியும் தப்பவே முடியாது! நான் போய் வாயிற்படியில் நின்றுகொள்கிறேன். அந்த வழியாகத்தானே எல்லோரும் வெளியேற வேண்டும்!" என்று தமக்குள்ளே நினைத்துக்கொண்டு வாயிற்படியண்டைக் கதவு ஓரமாக நின்ற வண்ணம் கண்கொட்டாமல் வெளியே செல்லுபவர் ஒவ்வொருவரையும் தேனனூர் உற்று நோக்கிக்கொண்டிருந்தார். உச்சிவேளை வரையில் அவர் அவ்வாறே நின்றார். எல்லோரும் வெளியேறிவிட்டனர். ஆனால், பூவனூர் மட்டும் கண்ணுக்குத் தென்படவே யில்லை

இரண்டு திங்கள் வரையில் தேனனூர் காசியிலிருந்தார்; ஊரெல்லாம் தேடினார். பூவனூர் தவிர அறிந்தவர்களும் அறியாதவர்களும் பலப்பலர் அவர் கண்ணில் பட்டனர். கடைசியாகத் தேனனூர் கங்கைத் தீர்த்தத்தை இரண்டு செப்புப் பாத்திரங்களில் மொண்டு, அவற்றின் வாயை மூடிக் காற்றுப் புகாமல் ஈயத்தால் அடைத்துக்கொண்டார். கோயில் மதிற் சுவரில் எட்டு இடங்களில் தம் பெயரைத் தாம் வந்ததற்கு அறிகுறியாக அவர் செதுக்குவித்தார்.

பயணத்திற்கு வேண்டும் பணம் போக எஞ்சிய பணம் செலவழிந்துவிட்டது. எனவே, அவர் தம் ஊர் நோக்கிப் புறப்பட்டார்.

### தேனனூர் மீட்சி

தேனனூர் தாம் முன்பு வந்த வழியே ஊர் நோக்கிச் சென்றார். தம்முடைய ஊரை அணுக

அணுக தாம் இல்லாதபோது வீட்டு விவகாரங்கள் எல்லாம் என்ன ஆயினவோ என்ற கவலை அவர் உள்ளத்தில் குடிகொள்ளத் தலைப்பட்டது. "நான் பிரிந்தகாலம் சிறிதே என்றாலும், இதற்குள் எவ்வளவோ செயல்கள் தவறியிருக்கலாம்; எவ்வளவோ பொருள் பாழடைந்திருக்கலாம். ஒரு வீடு கட்டுவதற்கு ஆயுள்காலம் முழுவதுங்கூடப் பிடிக்கும். ஆனால், அதை அழிப்பதற்கு மிகுந்த காலம் தேவையில்லை." இவ்வாறெல்லாம் எண்ணிய தேனனார் தாம் இல்லாமல் தம் மகன் வீட்டு விவகாரத்தை எவ்வாறு நடத்தினனோ என்றும், ஆடு மாடுகள் குளிர்காலத்தில் எவ்வாறு தவித்தனவோ என்றும், தாம் சிறிது குறை விட்டிருந்த வீடு கட்டி முடிக்கப் பட்டதோ இல்லையோ என்றும் பலவாறு நினைத்து கவலைப்பட்டார். பூவனுரை விட்டுப் பிரிந்த ஊரை அடைந்ததும், அவ் வூரும் மக்களும் முன்பு இருந்தவர்களேயோ என்ற ஐயம் தேனனார் மனத்தில் உண்டாயிற்று. ஏனெனில் முன்பு அவர்கள் பட்டினியால் வாடி வதங்கிக் கிடந்தனர். இப்பொழுதோ அவர்கள் நலங்களெல்லாம் பெற்று வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு நல்ல அறுவடை கிடைத்தது. துன்பங்களிலிருந்து அவர்கள் அடியோடு நீங்கினார்கள்; அத் துன்பங்களை மறந்தே போனார்கள்.

பூவனார் தங்கியிருந்த அதே யிடத்திற்குத் தற்செயலாக ஒருநாள் மாலையில் தேனனார் சென்றார். அவரைக் கண்டவுடன் வெள்ளாடை அணிந்த ஒரு சிறு பெண், தன் குடிசையை விட்டு வெளியே ஓடி வந்து, "தாதா, தாதா, வீட்டிற்குள் வாருங்கள்!" என்று அன்புடன் அழைத்தாள்.

## தேனனர் தெளிவு

தேனனர் தம் வழியே செல்லத்தான் நினைத்தார். ஆனால், அச் சிறு பெண் அவரை மேற்செல்ல விடவில்லை. அவருடைய மேலங்கியை இறுகப் பிடித்துக்கொண்டு, நகை முகத்துடன், அவள் அவரைத் தன் குடிசைக்கு இழுத்துச் சென்றாள். அங்கே ஒரு சிறு பையனோடு ஒருத்தி வெளியே வந்து அவரை வரவேற்றாள்.

" உள்ளே வாருங்கள் ! ஐயா, இன்றிரவு இங்கேயே உணவு உண்டு தங்கியிருந்து, நாளைக்கு வேண்டுமானால் போகலாம்," என்றாள் அந் நங்கை.

எனவே தேனனர் வீட்டிற்குள் சென்றார்.

" இவர்களைக் கேட்டுப் பூவனைப்பற்றி ஏதாவது தெரிந்துகொள்ளலாம் என்று நினைக்கிறேன். தண்ணீர் குடிப்பதற்காக அவன் வந்த குடிசை இதுவாகத்தான் இருக்கவேண்டும் !" என்று தேனனர் எண்ணினர்.

அந்த நங்கை அவர் தோளில் இருந்த பையை வாங்கிவைத்துவிட்டு, அவருக்கு முகங் கழுவத் தண்ணீர் கொடுத்தாள்! பிறகு உட்காரவைத்துப் பாலும் பலகாரங்களும் படைத்தாள். வழிப்போக்கராகிய தம்மிடம் அளவற்ற அன்பு காட்டி உபசாரம் செய்ததற்குத் தேனனர் நன்றி கூறினர். அதை ஏற்க விரும்பாதவள்போல அவள் தன் தலையை ஆட்டினள்.

" பெரியீர், தங்களைப்போன்ற வழிப்போக்கர்களை வரவேற்று உபசரிப்பதற்கு இன்றியமையாத கார

ணம் ஒன்று உண்டு. வாழ்க்கை இன்னது என்பதை வழிப்போக்கர் ஒருவரே எங்களுக்குநன்ருகஎடுத்துக் காட்டினார். கடவுளை மறந்து, நாங்கள் விலங்குகள் போல வாழ்ந்துவந்தோம்; அதற்காக எங்களைக் குற்றுயிரும் குலையுயிரும் ஆகுமளவும் அவர் எங்களுக்குத் தண்டனை கொடுத்தார். சென்ற ஆண்டின் இறுதியில் குளிர் தாங்கமாட்டாது நாங்கள் எல்லோரும் நோயுற்றுக் கிடந்தோம்; துணை ஒருவருமின்றி இருந்தோம். உண்பதற்கு ஒரு கவளமும் கூட எங்களுக்கு உணவு கிடைக்கவில்லை. நாங்கள் இறந்தே போய்விட்டிருப்போம். ஆனால் அருளே வடிவமான கடவுள், தம்முடைய அருள் வடிவம் போன்ற வடிவமுடைய கிழவரை அனுப்பி எங்களைக் காத்தார். "சிறிது குடிநீர் தாருங்கள்" என்று கேட்டுக்கொண்டே அம்முதியவர் எங்கள் வீட்டிற்குள் வந்தார்; நாங்கள் இருந்த நிலையைக் கண்டார்; எங்கள்மீது இரக்கங் கொண்டார்; இறுதியில் எங்களோடேயே தங்கி விட்டார்! உண்ண உணவு வாங்கிக்கோண்டு வந்து அவர் எங்களுக்குத் தந்தார். அவர், தாமே தண்ணீர் கொண்டு வந்து எங்களுக்குப் பருகக் கொடுத்தார். எங்களை மறுபடியும் எழுந்து உலாவுவதற்கு அவர் செய்த செயல்கள் பலப்பல. எங்கள் நிலங்கள் அடமானத்தில் கிடந்தன. அவற்றை அவரே மீட்டுத் தந்தார்; இறுதியாக குதிரையும் வண்டியும் வாங்கிவந்து எங்களுக்குக் கொடுத்தார்."

அப்பொழுது, கிழவி, வீட்டிற்குள் நுழைந்து அவள் சொல்லுவதைக் குறுக்கிட்டு, "எங்களுக்கு உதவி செய்தவர் மனிதரோ, தேவதூதரோ இன்னர் என்பது எங்களால் துணிந்து கூறமுடியாது. அவர் எங்கள் எல்லோரிடமும் அளவில்லாமல் அன்பு கொண்டார்; இரக்கம் காட்டினார்; இறுதியில் தம்முடைய பெயர்கூட இன்னது என்று சொல்லா

மல் போய்விட்டார். நாங்கள் யாருக்கு வணக்கம் செலுத்துவது என்பதுகூடத் தெரிந்துகொள்ள முடியவில்லை. இப்போதுதான் நடந்ததுபோல் இருக்கிறது! அவற்றை யெல்லாம் என் கண்முன்னுலே இப்போதும் காண்கிறேன். அதோ அங்கேதான் நான் மரண வேதனை பட்டுக் கொண்டு கிடந்தேன். அப்போது வழுக்கைத் தலையுடைய ஒரு முதியவர் வந்துநின்ருர். அவரை உற்று நோக்குவதற்கு, அவரிடம் வியக்கத் தகுந்தது ஒன்றும் காணப்படவில்லை. சிறிது குடித்தண்ணீர் அவர் கேட்டார். பாவியாகிய நான் வாய் திறக்கவும் முடியாமல் என்ன எண்ணினேன் தெரியுங்களா? ‘இங்கே இவன் எதற்காக இவ்வாறு கத்தித் தொந்தரவு செய்கின்ருன் ?' என்று வெறுப்புக்கொண்டேன். ஆனுல் அவர் என்ன செய்தார் என்பதைக் கேளுங்கள்! எங்களைக் கண்டவுடன் தம்தோளில் இருந்தபையை இதே இடத்தில் கீழே வைத்து அதை அவர் விரைவோடு அவிழ்த்தார்.

அச் சமயத்தில் அந்தச் சிறு பெண்ணும் அவளோடு கலந்து கொண்டாள், “இல்லை பாட்டி! அவர் தம் பையை முதலில் அங்கே வைக்கவில்லை. இதோ, அங்கே, நம்முடைய வீட்டின் நடுவிலே முதலில் வைத்து, அதைப் பிறகுதான் விசிப் பலகையின் மேலே அதைக் கொண்டுபோய் வைத்தார்,” என்று அச் சிறுமி சொன்னுள்.

அதன் பிறகு, அவர் சொன்னதும், செய்ததும், அவர் உட்கார்ந்த இடமும், தூங்கிய இடமும் தமக்குள் ஒவ்வொருவரிடமும் அவர் சொல்லிய இன்சொற்களும் முதலிய எல்லாவற்றையும் அவரிடம் சொல்லிச் சொல்லி அவரை அவர்கள் எல்லோரும் மனமார வாழ்த்தினுர்கள்.

இரவு வந்தது. வீட்டுக்காரனும் குதிரைவண்டியில் வந்து சேர்ந்தான். அவனும், அம் முதியவர் தங்களோடு வாழ்ந்துவந்த விதங்களை யெல்லாம் பற்றித் தேனனாரிடம எடுத்துக் கூறினான்.

"அவர்மட்டும் அப்போது வரவில்லை என்றால், நாங்கள் எங்கள் பாவத்தோடு இறந்திருப்போம்! ஒன்றும் செய்ய முடியாதிருந்த நிலையில் கடவுளைப் பழித்தோம்; மக்களைக் குறை கூறினோம். ஆனால், அப்பெரியார் எங்களை மறுபடியும் எழுந்து உலாவும்படி செய்தார். அவர் மூலமாகத்தான் நாங்கள் கடவுளை உள்ளவாறு அறியலானோம்; மக்களிடம் கடவுள் தன்மையுண்டு என்பதைத் தெரியலானோம். கடவுள் அவருக்கு எல்லா நலன்களும் அருளவேண்டும்! அதுவன்றி, நாங்கள் அவருக்கு எந்த வகையில் பதிலுதவி ஆற்ற முடியும்? விலங்குகள் போல வாழ்ந்தோம்! எங்களை உண்மை மக்களாக அவர் ஆக்கினார்."

தேனனார்க்கு உணவு படைத்துப் பிறகு படுக்க இடமும் அவர்கள் காட்டினார்கள்; தாங்களும் படுத்து உறங்கினார்கள்.

தேனனார் படுத்தாரே யொழிய அவரால் தூங்கவே முடியவில்லை. பூவனாரை அவர் மறக்க இயலவில்லை. காசியில் சிவலிங்கத்திற்கு அருகே மூன்று முறை பூவனாரைக் கண்ட காட்சி அவர் மனக் கண் முன் வந்து நின்றது.

"இப்பொழுதுதான், பூவன் எனக்கு முன்னால் எப்படிக் காசிக்குப் போய்ச் சேர்ந்தான் என்பதன் உண்மை தெளிவாயிற்று. என்னுடைய வழிபாட்டினைக் கடவுள் ஏற்றிருக்கலாம்; ஏற்றிராமலும் இருக்

கலாம். ஆனால், பூவனுடைய பிரார்த்தனையைக் கடவுள் ஏற்றார் என்பது திண்ணம்!''

பொழுது விடிந்ததும், அவர்களுக்கெல்லாம் நன்றி கூறிவிட்டு, அவர்களிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு, தேனனார் புறப்பட்டார். ஆனால், அதற்கு முன்பே சில அப்பங்களை அவருடைய பையில் அவர்கள் வைத்துவிட்டார்கள். அவர் பயணமானார்.

## வீட்டில் தேனனார்

தேனனார் ஓராண்டு வெளியே காலங் கழித்தார். அவர் திரும்பி வீட்டை அடைந்தபோது, இளவேனிற் காலத்து மாலைநேரம். அவருடைய மகன் அப்போது வீட்டில் இல்லை. அவன் சாராயக்கடைக்குச் சென்றிருந்தான்! திரும்பி வந்தபோது, சிறிது அதிகமாகவே அவன் குடித்திருந்தான். தேனனார் தம்முடைய வீட்டு விவகாரங்களைப் பற்றி அவனிடம் கேட்டார். அவன் கூறிய பதிலிலிருந்து, தாம் இல்லாத காலத்தில் அவன் தாறுமாறாக நடந்துகொண்டான் என்பதை அவர் அறிந்தார். பணத்தைக் கண்டபடி செலவு செய்துவிட்டு வேலை யொன்றும் செய்யாமல் அவன் காலங் கழித்திருந்தான். தேனனார் தம்முடைய மகனைக் கண்டவாறு திட்டினார்; மகன் அவருக்கு எதிரிட்டுக் கண்டபடிபதிலளித்தான்.

"நீங்களே ஏன் இங்கேயே இருந்து, வீட்டு விவகாரங்களை எல்லாம் கவனிக்கவில்லை? பணத்தையெல்லாம் நீங்களே எடுத்துக்கொண்டு போய்ச் செலவு செய்துவிட்டுத் திரும்பிவந்து என்னைக் கணக்குக் கேட்பது எவ்வாறு தகுதியாகும்?'' என்று மகன் துணிவுடன் கேட்டான்.

முதியவருக்குக் கோபம் பெருகியது. எனவே அவர், தம் மகனை முதுகில் ஓங்கி அறைந்தார்.

பொழுது விடிந்ததும் அவர் தம்முடைய மகனைப் பற்றிப் பிராது கொடுக்கப் பஞ்சாயத்தாரிடம் சென்றார். பூவனார் வீட்டு வழியே போகும்போது, மேல் மாடியில் இருந்துகொண்டு அவருடைய மனைவியார் அவருக்கு வணக்கம் செலுத்தினார்.

**பூவனார் இல்லம்**

பின்பு அவர் அங்கிருந்து கீழே இறங்கி வந்து, "தாங்கள் நலமாகக் காசிக்குச் சென்று தங்கள் விரதத்தை முடித்துவிட்டுத் திரும்பி வந்தீர்களா?" என்று கேட்டார்.

"கடவுள் அருளால் விரதத்தை முடித்துத்தான் திரும்பினேன். ஆனால், உன்னுடைய கணவனை வழியில் பிரிந்துவிட்டேன். அவன் நலமாக வீடு வந்து சேர்ந்தான் என்றும் கேள்விப்பட்டேன்," என்று தேனனார் கூறினார்.

அந்த அம்மையார் பேசுவதில் மிகவும் ஆவல் கொண்டவர்.

"ஆமாம் பெரியவரே! அவர் நலமாகவே வீடு வந்து சேர்ந்தார். அவர் வந்து சேர்ந்து நெடுநாட்கள் ஆயின. விரைவாக அவரை வீட்டிற்கு அனுப்பி விட்டதுபற்றி ஆண்டவனுக்கு நாங்கள் மகிழ்வோடு மிகுதியாக நன்றி செலுத்தினோம். அவர் இல்லாமல் நாங்கள் மிகவும் கவலைப்பட்டோம். அவருக்குத்

தள்ளாமை மிகுதியாய்விட்டது. அவரால் ஒரு வேலை யும் செய்ய முடியாது. இருந்தாலும், அவர் எங்கள் குடும்பத் தலைவர். அவர் இருந்தால்தான் எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. அவர் இல்லாத காலத்தில் என் மகன் அடைந்த கவலைக்கு அளவே இல்லை. அவர் வந்ததும் அவன் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்தான் தெரியுங்களா? அவர் இல்லாதபோது சூரிய வெளிச்சம் இல்லாமல் இருண்டதுபோல வீடு காணப்பட்டது. எங்களுக்கெல்லாம் அவர் இல்லாத போது சுறுசுறுப்பே இருக்கவில்லை. எங்களுக்கு அவர்மேல் அளவில்லாத ஆசை உண்டு; அவரை நாங்கள் கண்ணுங் கருத்துமாகப் பார்த்துக்கொள்ளு கிறோம்," என்றார் அந்த அம்மையார்.

"அவன் இப்பொழுது வீட்டில் இருக்கின் றானோ?"

"வீட்டில்தான் இருக்கிறார்! இப்பொழுது அவர் கோழிக்குஞ்சுகளுக்குத் தீனி போட்டுக்கொண்டிருக் கிறார். இவ்வாண்டில் கோழிக் குஞ்சுகள் எதிர் பார்த்த அளவுக்குமேல் பன்மடங்காக விருத்தியா யிருக்கின்றன. உள்ளே வாருங்கள்! அவர் உங்க ளைப் பார்த்து அளவில்லா மகிழ்ச்சி கொள்வார்."

**பூவனாரைத் தேனனார் காணல்**

தேனனார், வீட்டிற்குள் நுழைந்து புழைக் கடையை அடைந்தார். அரையில் மட்டும் ஒரு சிறு துண்டு கட்டிக்கொண்டு, வெயில் வேகத்தையும் பொருட்படுத்தாமல், கோழிக் குஞ்சுகளுக்குப் பூவ னார் தீனி போட்டுக் கொண்டிருந்ததைத் தேனனார் பார்த்தார்.

அதுகண்ட தேனனார் பெருவியப்புக் கொண்டார். அவருடைய நண்பர் வந்திருப்பதை மனைவியார் தம் கணவருக்கு அறிவித்தார்.

பூவனார் திரும்பிப் பார்த்து, முகமலர்ச்சியுடன் தம் நண்பருக்கு வணக்கம் கூறி, அவரை வரவேற்றார்.

“காசிக்கு நலமாகச் சென்று சேர்ந்தாயோ?” என்று பூவனார் தேனனாரைக் கேட்டார்.

“என்னுடைய கால்கள் காசியை அடைந்தன. கங்கையிலிருந்து தீர்த்தமும் கொண்டு வந்திருக்கிறேன்; வீட்டுக்கு வந்தால் உனக்கு அதில் பங்கு கிடைக்கும். ஆனால், காசி விஸ்வேஸ்வரர் என்னுடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டாரா என்பதைத்தான்....”

“நல்லது! கடவுளுக்கு நன்றி செலுத்துவேன்! கடவுள் உனக்கு எல்லா நலன்களும் அருளுவாராக!” என்றார் பூவனார்.

தேனனார் சிறிது நேரம் ஒன்றும் பேசாமல் சும்மா இருந்தார். பிறகு, “என்னுடைய கால்கள் அங்கே இருந்தன. ஆனால், உண்மையில் என்னுடைய உயிரோ அல்லது மற்றொருவருடைய உயிரோ அங்கே இருந்தது என்பது....”

## ஆண்டவன் செயல்

“அதெல்லாம் ஆண்டவன் செயல்; நம் செயலன்று!” என்றார் பூவனார்.

“நான் திரும்பி வருகையில் நீ தங்கியிருந்த வீட்டில், நானும்.......”

பூவனூர் திடுக்கிட்டு உடனே விரைவாக, "அதெல்லாம் கடவுள் செயல்! நண்பா், கடவுள் செயல்! வா வீட்டிற்குள்! நல்ல முட்டைகள் இருக்கின்றன! அவற்றுள் சில உனக்குத் தருகிறேன்." இவ்வாறு பேச்சை மாற்றி வேறு விவகாரங்களைப் பற்றிப் பூவனூர் பேசத் தொடங்கினூர்.

## உணர்ந்த பாடம்

தேனனூர் பெருமூச்சுவிட்டார். அவரிடம், நாம் வழியில் தங்கிய வீட்டில் இருந்தவர்களைப்பற்றியோ, காசியில் சிவலிங்கத்திற்கு அருகில் பூவனூரைக் கண்டதுபற்றியோ ஒன்றும் தேனனூர் கூற முடியவில்லை. ஆனல், உண்மையில் கடவுளுக்கு ஒருவர் தம் விரதத்தைச் செலுத்துவதும், அவருடைய அருள்வழியில் நிற்பதும் என்பது, பிறரிடம் அன்பு காட்டுவதும், மற்றவர்களுக்குத்தொண்டு செய்வதுமே யாகும் என்று தேனனூர் தெரிந்து கொண்டார்.

—

# 3. தெய்வம் நின்று உணர்த்தும்

## ஆநந்தன்

ஆற்றூர் என்பது செங்கற்பட்டு ஜில்லாவில் அழகும் வளமும் உள்ள ஓர் ஊர். அங்கே ஆநந்தன் என்ற ஒரு வணிகன் இருந்தான். அவனுக்கு இரண்டு கடைகளும், ஒரு வீடும் சொந்தமாக இருந்தன.

ஆநந்தன் அழகு மிகுந்தவன்; எப்பொழுதும் மகிழ்ச்சியாகவே இருப்பான்; இனிய பாடல்களைப் பாடுவதில் அவ் வூரில் அவனுக்கு ஒத்தவரும் மிக்கவரும் இல்லை. இளையவனாக இருந்தபோது, அவன் குடிக்கப் பழகிவிட்டான். அதிகமாகக் குடித்து விட்டுச் சில சமயம் தலைகால் தெரியாமல் அவன் ஆடுவதும் உண்டு. ஆனால், மணம் ஆனபிறகு அவன் குடிப்பதை விட்டுவிட்டான்; அப்படிக் குடித்தாலும், ஏதோ ஒரு சமயத்தில், சிறிதளவே குடிப்பான். இளமையில் பழகிய தீய பழக்கத்தை அடியோடு விடுவது இயலாது அன்றோ?

## கெட்ட கனவு

ஒரு நாள், அவன் உத்திரன்மேரூர்ச் சந்தைக்குப் புறப்பட்டான். தன் மனைவி மக்களிடத்தில் சொல்லி விட்டு அவன் புறப்படும்போது, அவன் மனைவி அம்புஜம் மிகுந்த கவலையோடு அவனைச் சந்தைக்குப் போகவேண்டாம் என்று தடுத்தாள்.

"நான் உங்களைப் பற்றி ஒரு தீய கனவு கண்டேன். ஆகையால், போகவேண்டாம்," என்று

அம்புஜம் சொல்லக் கேட்ட ஆநந்தன், "எனக்கு ஏதாவது தீங்கு நேரிடும் என்று பயப்படுகின்ருயா? வழியில் ஒன்றும் தீங்கு நேராது. நீ கவலை கொள்வதற்குக் காரணம் ஒன்றும் இல்லை!" என்ருன்.

"எதன்பொருட்டு எனக்குக் கவலை ஏற்பட்டுள்ளது என்பதை நான் கூற முடியவில்லை! ஆனல் நான் கண்ட தீய கனவு, என்ன தீங்கை விளைவிக்குமோ என்பது எனக்குத் தெரியவில்லை. நீங்கள் சந்தைக்குப் போனதாகவும், போய்த் திரும்பி வந்து உங்கள் தலைப்பாகையைக் கழற்றினதும் தலைமயிர் எல்லாம் நரைத்துப்போய் இருந்ததாகவும் கனவு கண்டேன், அதுவே என்னைக் கவலைப்படுத்தியது", என்ருள் அம்புஜம்.

அது கேட்டு ஆநந்தன், கொல்லென்று சிரித்து, "அது நல்ல சகுனம் ஆயிற்றே! அதற்குக் கவலை அடையவேண்டுவதில்லையே! நான் சந்தைக்குப் போய் வைரக் கற்களையெல்லாம்மிக்க இலாபத்திற்கு விற்றுவிட்டு, உனக்கும் சிறந்த பரிசில்கள் கொண்டு வருகின்றேனு, இல்லையா பார்!" என்ருன்.

சந்தைக்கு

இவ்வாறு கூறிவிட்டுத் தன் இரட்டை மாட்டு வண்டியில் ஏறிக்கொண்டு ஆநந்தன் சந்தைக்குப் புறப்பட்டான்.

நடு வழியில், அவன் மற்ருெரு வணிகனைக் கண்டான். அவன் ஆநந்தனேடு நெடுநாள் பழகியவன். எனவே, இருவரும், அன்றைய இரவு ஒரு சத்திரத்தில் உணவு அருந்தி விட்டு, ஒரே அறையில் தங்கினர்.

விடியற்காலையிலேயே விழித்துக் கொள்வது ஆநந்தனுடைய இயற்கை. வழக்கம்போல் விடியற்காலையிலேயே விழித்துக்கொண்ட அவன், வண்டியைக் கட்டுமாறு வண்டிக்காரனுக்குக் கூறிவிட்டுச் சத்திரக்காரனுக்கும் உணவு உண்டதற்குச் சேர வேண்டிய பணத்தைக் கொடுத்துப் பைசல் செய்த பின், வண்டியில் ஏறி உட்கார்ந்தான். குளிர்ந்த வேளையாய் இருந்ததால், மாடுகள் விரைவாகவும் மகிழ்ச்சியாகவும் வண்டியை இழுத்துச் சென்றன.

பத்து மைல் கடந்து சென்றதும், மாடுகளுக்குத் தண்ணீர் காட்டும் பொருட்டு, ஆநந்தன் வண்டியை நிறுத்துமாறு வண்டிக்காரனிடம் சொன்னான்; பின்பு, அங்கேயிருந்த சத்திரம் ஒன்றில் சிற்றுண்டி அருந்திவிட்டு, அச்சத்திரத்தின் முன் தாழ்வாரத்தில் ஓர் இடத்தில் உட்கார்ந்து கொண்டு இனிமையாக ஒரு பாட்டைப் பாடிக்கொண்டிருந்தான்.

## போலீஸ் இன்ஸ்பெக்டர்

திடீரென ஒரு ஜட்காவண்டி அங்கே வந்து நின்றது. அதிலிருந்து ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரும், இரண்டு போலீஸ் கான்ஸ்டேபிள்களும் இறங்கினார்கள். ஆநந்தனைக் கண்டதும், இன்ஸ்பெக்டர், "உன் பெயர் என்ன? நீ எங்கிருந்து வந்தாய்?" என்று கேட்டார். ஆநந்தன் அவற்றிற்குப் பதில் அளித்துவிட்டு, "தாங்கள் சிறிது தேநீர் அருந்துங்கள்; களைத்துப்போய் இருக்கின்றீர்களே!" என்றான். ஆனால் அவர் மேலும் தொடர்ந்தும், "நீ சென்ற இரவு எங்கே தங்கினாய்? நீ தனியே ஒருவனாகத் தங்கினாயா? யாராவது ஒரு வணிகனோடு தங்கினாயா? இன்று காலை அந்த வணிகனைப் பார்த்தாயா? சத்திரத்தை விட்டு ஏன் அதிகாலையிலேயே

புறப்பட்டு வந்துவிட்டாய்?" என்று கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனார்.

இன்ஸ்பெக்டர் தன்னை ஏன் அவ்வாறெல்லாம் கேள்வி கேட்டார் என்பது ஆநந்தனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. வியப்பும் திகைப்பும் அடைந்த ஆநந்தன் அதுவரையில் நடந்த எல்லாவற்றையும் விளக்கமாகக் கூறிவிட்டு, "என்னை இவ்வாறெல்லாம் கேட்கிறீர்களே! நான் என்ன திருடனா? வழிபறி கொள்ளைக்காரனா? சொந்த வாணிகம் காரணமாகப் பயணம் செய்து கொண்டிருக்கும் என்னை இவ்வாறெல்லாம் கேட்பது தகுதியாகாதே!" என்றான்.

"நான் இந்த ஜில்லாவின் போலீஸ் இன்ஸ்பெக்டர் என்பது உனக்கு விளங்கவில்லையா? சென்ற இரவு உன்னுடன் சத்திரத்தில் தங்கிய வணிகனுடைய தலை வெட்டுண்டு கிடந்தது. எனவே, உன்னுடைய மூட்டை முடிச்சுக்களை நான் சோதனை செய்தாகவேண்டும்" என்று கூறிவிட்டுப் போலீஸ் கான்ஸ்டேபிள்களை அவனுடைய மூட்டை முடிச்சுக்களை அவிழ்த்துப் பார்க்கும்படி இன்ஸ்பெக்டர் உத்தரவிட்டார். கத்தி ஒன்று மூட்டையில் காணப்பட்டது.

"யாருடைய கத்தி இது?" என்று இன்ஸ்பெக்டர் ஆநந்தனை அதட்டிக் கேட்டார்.

இரத்தம் தோய்ந்த கத்தியைக் கண்டதும் ஆநந்தன் திகைப்பும் அச்சமும் அடைந்தான்.

"இந்தக் கத்தியில் இரத்தம் எப்படி வந்தது?" என்று இன்ஸ்பெக்டர் மறுபடியும் அதட்டிக் கேட்டார்.

ஆநந்தன் பதில் கூற வாயெடுத்தான். ஆனல் பேச்சொன்றும் அவன் வாயிலிருந்து எழவே இல்லை. பின்பு தட்டுத்தடுமாறி, "எனக்கு...ஒன்றும் தெரியாது..........கத்தி........என்னுடையது........அன்று" என்றான்.

"இன்று காலை, அந்த வணிகன் தன் தலை வெட்டுண்டு படுக்கையில் கிடந்தான். நீயே அவனுடன் இருந்தவன். எனவே நீதான் அவன் தலையை வெட்டி யிருக்கவேண்டும். வேறு யாரும் வெட்டியிருக்க முடியாது. உள் தாள் இட்டுக்கொண்டு நீங்கள் அறைக்குள் படுத்துக்கொண்டதாகச் சத்திரக்காரன் கூறினன். இப்பொழுது உன்னுடைய மூட்டையில் இரத்தம் தோய்ந்த கத்தி கண்டு எடுக்கப்பட்டது. உன்னுடைய முகமும், நடத்தையும் நீ செய்த குற்றத்தை எடுத்துக் காட்டுகின்றன. எப்படிக் கொன்றாய்? எவ்வளவு பணம் திருடிக் கொண்டாய்? ; என்பதை ஒளியாமல் சொல்லு."

"சத்தியமாகச் சொல்லுகிறேன். நான் அவன் தலையை வெட்டவே இல்லை. நேற்று, இருவரும் சேர்ந்து உணவு உண்டோம் என்பது உண்மைதான். அதற்குப் பிறகு அவனைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. அவன் அந்த அறையின் ஒரு பக்கத்தில் படுத்து உறங்கினன். நான் ஒரு பக்கத்தில் படுத்துக் கொண்டேன். அவ்வளவுதான்! என்னிடம் எனக்குச் சொந்தமான வைரம் எட்டாயிரம் இருக்கின்றன. அந்தக் கத்தி என்னுடையதன்று," என்றான் ஆநந்தன்.

ஆனல், அவனுடைய வாக்குத் தழுதழுத்தது. அவனுடைய முகம் வெளுத்துவிட்டது. அவனுடைய நடுக்கமே அவனைக் குற்றவாளியென்று விளக்கியது.

### ஆனந்தன் சிறைப்படல்

போலீஸ் இன்ஸ்பெக்டர், ஆநந்தன் கைக்கு விலங்கிட்டு அவனை வண்டியில் ஏற்றுமாறு கான்ஸ்டேபிள்களுக்கு ஆணையிட்டார். அவர்கள் அவ்வாறே செய்தார்கள். ஆனந்தன் ஒன்றும் தெரியாமல் கலங்கினான். அவனிடமிருந்த பணமும், வைரமும், சாமான்களும் பறிமுதல் செய்யப்பட்டன. செங்கற்பட்டுச் சிறைச்சாலையில் ஆனந்தன் அடைக்கப்பட்டான்; அவனுடைய குண நலன்களைப்பற்றி ஆற்றூரில் உள்ள பெரியார்களைக் கூப்பிட்டு இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"முன்பெல்லாம் ஆநந்தன் குடிப்பதும் வீண் காலம் கழிப்பதும் வழக்கம். ஆனல், மணம் ஆன பிறகு, அவன் திருந்திவிட்டான்." என்று அவர்கள் கூறினார்கள். பின்பு ஒரு நாள் மாஜிஸ்ட்ரேட், ஆநந்தன் வழக்கை விசாரித்து 'சித்தூர் மணவாள நாயுடு என்பவரைக்கொன்று அவரிடமிருந்து பதினாயிரம் வைரக் கற்களை ஆனந்தன் திருடிக்கொண்டான்' என்று குற்றச்சாட்டுத் தீட்டினார்; ஆயுள் முழுவதும் சிறைவாசம் விதித்தார்.

### மனைவியின் துயரம்

ஆனந்தன் மனைவி அம்புஜம், தன் கணவனைப் பற்றிய செய்தி யறிந்து திகைத்துப்போனாள். அந்தச் செய்தியை முதல் முதல் அவள் நம்பவே முடியவில்லை. அவளுடைய குழந்தைகள் சின்னஞ்சிறியவை; ஒன்று பால் குடிக்கும் பருவத்தது. எல்லாக் குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு, அம்புஜம் சிறைக்குப் போனாள். முதலில் சிறைக் காவலர்கள் ஆநந்தனைப் பார்க்க அவளுக்கு அனுமதி தர மறுத்தார்கள். தன் ஊரில் உள்ள சில பெரியார்களின் துணைபெற்று வந்து, நீண்ட நேரம் கண்ணீர்விட்டுக் கதறி மன்றாடியபின், அவளுக்கு அனுமதி கிடைத்தது. சிறை

ஆடையோடு,கையில் விலங்குபூண்டு,திருடர்களோடும் குற்றவாளிகளோடும் தன் கணவன் இருப்பதைக் கண்டதும், அம்புஜம், 'கோ' எனக் கதறி வீழ்ந்து மூர்ச்சையானாள். மறுபடியும், தன் உணர்வு பெறுதற்கு அவளுக்கு நீண்ட நேரம் பிடித்தது. உணர்வு பெற்று எழுந்ததும், தன் குழந்தைகளை யெல்லாம் தன்னிடம் அணைத்துக்கொண்டு, கணவன் அருகில் உட்கார்ந்து வீட்டு விவகாரங்களை யெல்லாம் சொல்லி விட்டு அவனுக்கு அக்கதி நேர்ந்த வரலாற்றைக் கூறுமாறு அம்புஜம் கேட்டாள். அவன் எல்லாவற்றையும் கூறினான்.

"இப்போது நாம் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டாள் அம்புஜம்.

"மேல்கோர்ட்டாருக்கு மனுச்செய்யவேண்டும்," என்றான் ஆனந்தன்.

"ஊரார், முன்னமே அவ்வாறு செய்யவேண்டும் என்றார்கள். உடனே நான் அவ்வாறே மனுச் செய்தேன். மனு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்று திருப்பி விடப்பட்டதே, என்றாள் அம்புஜம்.

ஆனந்தன் ஒன்றும் பேசவில்லை! தலை கவிழ்ந்து மௌனம் சாதித்தான்.

"உங்கள் தலை மயிர் நரைத்துப் போயிற்று என்று நான் கண்ட கனவு வீணாய்ப் போகவில்லையே! கனவைப்பற்றிக் கூறினேனே, நினைவிருக்கிறதா? அன்று தாங்கள் புறப்பட்டே இருந்திருத்தல் ஆகாது:"

இவ்வாறு கூறிவிட்டு அம்புஜம், ஆனந்தனுடைய தலைமயிரைக் கோதிக்கொண்டே, "உண்மையைச் சொல்லுங்கள்! தாங்கள் கொலை செய்யவே இல்லையா?" என்று கேட்டாள்.

"ஐயோ! நீ கூட என்மீது ஐயப்படுகிறாயே!" என்று கூறிக்கொண்டே, தன் முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு ஆநந்தன் கதறி அழ ஆரம்பித்தான். அப்போது சிறைக்காவலன் ஒருவன் அங்கே வந்து, "மனைவியும் குழந்தைகளும் உடனே வெளியேற வேண்டும்" என்றான். ஆநந்தன் அவர்களுக்கு இறுதி விடை கொடுத்து அனுப்பினான்.

## ஆநந்தன் சிந்தனை

அவர்கள் போனபிறகு, மனைவி கேட்டதை ஆநந்தன் நிந்தித்தான்! மனைவியும தன்மீது ஐயப்பட்டதை எண்ணினபோது, "கடவுள் ஒருவனே உண்மை யறிய முடியும். அவன் ஒருவனிடம் தான் நான் விண்ணப்பித்துக்கொள்ள முடியும்! அவன் ஒருவனிடம்தான் நான் அருள் பெற முடியும்!" என்ற முடிவிற்கு வந்தான்.

அதன்பிறகு ஆநந்தன் யாருக்கும் ஒரு விண்ணப்பமும் செய்யவில்லை; தனக்கு விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கையை அடியோடு இழந்து போனான்; ஆனால், இடைவிடாமல் கடவுளை எண்ணி, அருள் புரியுமாறு வேண்டினான்.

## அந்தமானிஸ் ஆனந்தன்

"இருபத்து நான்கு சாட்டை அடிகள் கொடுத்துச் செக்குத் தள்ளவைத்து நாடுகடத்த வேண்டும்," என்று ஆநந்தனுக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. சாட்டை அடிப் புண்கள் ஆறினபிறகு ஆநந்தன் அந்த மானுக்கு அனுப்பப்பெற்றான்.

அந்தமானில், குற்றவாளிப்பட்டத்தோடு, ஆநந்தன் இருபத்தாறு ஆண்டுகள் கழித்தான். அவன் தலை மயிர், பால்போல் நரைத்துவிட்டது. தாடி

நீண்டு, அடர்த்தியில்லாமல், சாம்பல் நிறம் உற்றது. மகிழ்ச்சிக் குறியெல்லாம் மடிந்து உடல் வளைவு பெற்றது; நடை மெலிந்தது. அவன் ஒன்றும் பேசுவதே இல்லை; ஒருபோதும் சிரிப்பதில்லை! இடைவிடாமல் இறைவனையே எண்ணிவந்தான்.

அந்தமானில், ஆநந்தன் நூல் நூற்கக் கற்றுக் கொண்டான். ஆதலால், அவனுக்குச் சிறிது பொருள் கிடைத்தது. அதுகொண்டு அவன் திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணக் கதைப் புத்தகம் ஒன்று வாங்கி, அதை ஓய்வு கிடைத்தபோதெல்லாம் படித்துவந்தான்; கதையின் இடையிடையே இருந்த தேவாரப் பாடல்களை நெட்டுருச் செய்தான்; தன்னுடன் இருந்த தோழர்களுக்கும் அவற்றைப் பாடும் வகையைக் கற்றுக்கொடுத்தான்; திங்கட்கிழமை தோறும் அவர்களோடு சேர்ந்து அவற்றைப் பாராயணம் செய்யலானான். அவன் குரல் இனிமையாகவே இருந்தது. தனிமையாகப் பாடுவதும், தோழர்களோடு சேர்ந்து பாடுவதும் அவனுக்கு ஆறுதல் உண்டாக்கின. அந்தமான், ஆநந்தனுக்கு இன்ப உலகம் ஆயிற்று.

சிறைக்காவலர்கள் ஆநந்தனுடைய அடக்கத்தைக் கண்டு, அவனிடம் விருப்பம் காட்டினர். சிறைத் தோழர்கள் யாவரும் அவனைப் பெரியார் என்றும், அடியார் என்றும் அழைக்கத் தலைப்பட்டனர். சிறை யதிகாரிகளுக்கு ஏதாவது விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டியிருந்தால், தோழர்களெல்லாரும் ஆநந்தனையே தமக்கு உரிய துணைவனாகக் கொண்டனர்; தங்களுக்குள் ஏதாவது சண்டை ஏற்பட்டால் அவனையே சமாதானம் செய்து வைக்குமாறு நாடினர்; அவன் சொன்னவாறே யாவரும் அடங்கி ஒழுகினர்.

தன் வீட்டுச் செய்தியைப்பற்றி ஆநந்தனுக்கு ஒன்றுமே எட்டவில்லை. தன் மனைவி மக்கள் உயிரோடு இருக்கிறார்களா என்பதைக்கூட அவன் தெரிந்துகொள்ள முடியவில்லை.

## புதிய குற்றவாளிகள்

ஒருநாள், சில புதிய குற்றவாளிகள் அந்தமானுக்கு வந்து சேர்ந்தனர். அன்று மாலை, பழைய அந்தமான் வாசிகள், புதியவர்களைச் சூழ்ந்து கொண்டு, அவர்கள் எந்த எந்த ஊர்களிலிருந்து வந்தவர்கள், என்ன என்ன குற்றம் செய்ததற்காகத் தண்டிக்கப் பெற்றவர்கள என்பவற்றைக் குறித்து விசாரித்தனர். ஆநந்தன் மட்டும் ஒன்றும் பேசாமல் அவர்கள் அருகில் தலை குனிந்து உட்கார்ந்துகொண்டு, புதியவர்கள் கூறியவற்றைக் கேட்டுக்கொண்டிருந்தான்.

## கண்ணப்பன்

புதியவர்களுக்குள் ஒருவன் அறுபது வயதானவன்; ஆறு அடி உயரம் இருப்பான்; முறுக்கேறிய உடல் உடையவன்; தாடி நரைத்திருந்தது; ஆனால் அது முகத்தோடு முகமாக ஒட்டக் கத்தரிக்கப்பெற்றிருந்தது. அவன், தான் கைதியாக்கப்பெற்ற வரலாற்றை எடுத்துரைக்கலானான்:

"தோழர்களே, கோச்சு வண்டி ஒன்றன் பக்கத்தில் கட்டியிருந்த குதிரை ஒன்றை அவிழ்த்தது கண்டு, நான் அதைத் திருட முயன்றேன் என்று குற்றம் சாட்டி, என்னைக் கைது செய்தார்கள். வீட்டிற்கு விரைந்து செல்வதற்காகவே அதை அவிழ்த்தேன். வீடு சென்றதும் அதைத் திருப்பித் துரத்தி விடவே எண்ணினேன். மேலும், குதிரைக்குச் சொந்

தக்காரன் என் நெருங்கிய நண்பன். ஆகவே, நான் செய்தது தவறில்லை என்றேன். நான் திருடியதாகவே என்னைக் கைது செய்தவர்கள் சாதித்தார்கள். எப்படி, எங்கே அதைத் திருடினேன் என்பதை அவர்கள் கூற இயலவில்லை. ஆனால், ஒரு சமயம் உண்மையாகவே நான் குற்றம் செய்தவன். அக் குற்றத்திற்காக நான் வெகு காலத்திற்கு முன்பே தண்டனை பெற்று இங்கே வந்திருக்கவேண்டும். ஆனால், அப்போது நான் அகப்பட்டுக் கொள்ளவில்லை. இப்போது குற்றம் ஒன்றும் செய்யாதிருக்கவும் இங்கே வந்திருக்கிறேன்......................இல்லை! இல்லை! முன் ஒரு சமயம் நான் இங்கே வந்திருக்கிறேன்; ஆனால், நீண்ட நாள் இங்கே தங்கவில்லை.''

“உன் சொந்த ஊர் யாது?'' என்று கேட்டான் ஒருவன்.

“என் சொந்த ஊரா? செங்கற்பட்டிற்கு அருகிலுள்ள ஆற்றூர் என் சொந்த ஊர். என் மனைவி மக்களெல்லாம் ஆற்றூரில் இருக்கிறார்கள். என் பெயர் கண்ணன்; கண்ணப்பன் என்று கூட என்னை அழைப்பார்கள்.”

## ஆனத்தன் கேள்வி

ஆநந்தன் தன் தலையைத் தூக்கிக் கண்ணனைப் பார்த்தான். “கண்ணப்பா! ஆநந்தன் சுற்றத்தார்களைப் பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா? அவர்கள் உயிரோடு இருக்கிறார்களா?”

“தெரியுமாவா? நன்றாகத் தெரியும்; ஆநந்தன் பிள்ளைகள் பெரும் பணக்காரர்களாக இருக்கிறார்கள். ஆநந்தன் மட்டும் நம்மைப்போல் பாவம் செய்து

இங்கே இருப்பதாகக் கேள்வி'' அஃதிருக்கட்டும் பெரியவரே, தாங்கள் இங்கே எப்படி வந்தீர்கள்?''

தன் துரதிருஷ்டத்தைப்பற்றி ஒன்றும் கூற ஆநந்தன் விரும்பவில்லை. ஆனால், அவன் பெரு மூச்சுவிட்டு, நான் செய்த பாவம் காரணமாக இந்த இருபத்தாறு ஆண்டுகளாக இங்கே காலம் கழிக்கிறேன்.''

''செய்த பாவம் யாது?'' என்றான் கண்ணப்பன்.

''அதெல்லாம் எதற்கு? சிறைவாசம் அனுபவிக்கும் ஊழ் இருந்தது; அடைந்தேன். அவ்வளவு தான்!'' என்றான் ஆனந்தன்.

அதற்குமேல் ஆனந்தன் ஒன்றும் கூற விரும்பவில்லை.

ஆனால், அவனுடைய தோழர்கள், யாரோ ஒருவன் ஒரு வியாபாரியைக் கத்தியால் குத்திக்கொன்று விட்டு, ஆநந்தன் மூட்டையில் கத்தியை வைத்து விட்டு ஓடிவிட்டதும், முறையில்லாமல் அவன் தண்டிக்கப்பட்டதும் ஆன செய்திகளைக்கூறினார்கள்.

**கண்ணப்பன் வியப்பு**

கண்ணப்பன் இந்தச் செய்திகளைக் கேட்டதும் ஆநந்தனை வியப்போடு உற்று நோக்கினான். நோக்கினவன், தன் தலையைச் சொரிந்துகொண்டே ''மிக நன்றாக இருக்கிறது! இது வியப்பிற்கு உரியதாகத் தான் இருக்கின்றது! அஃதிருக்கட்டும்! பெரியவரே! தாங்கள் என்ன, இவ்வளவு தள்ளாத பருவம் அடைந்து விட்டீர்களே?''

கண்ணப்பன் சொன்னதைக் கேட்டதும் மற்ற வர்கள் பெரு வியப்படைந்து, "இதற்கு முன்பு நீ ஆநந்தரை எங்கே பார்த்தாய்?" என்று கேட்டார் கள்.

கண்ணப்பன் அவர்கள் கேள்விக்கு ஒன்றும் பதில் கூருமல், "தோழர்களே, நாங்கள் இங்கே ஒரு வரை ஒருவர் சந்தித்தது மிகவும் வியத்தற்கு உரிய தாகத்தான் இருக்கிறது" என்ருன்.

கண்ணப்பன் கூறிய மொழிகள் ஆநந்தனுக்கு வியப்பை உண்டாக்கின. வியாபாரியைக் கொன்ற வன் இன்னுன் என்று கண்ணப்பன் அறிந்திருக்க லாமோ என ஆநந்தன் ஐயப்பட்டான். எனவே, அவன் கண்ணப்பனை நோக்கி, "அந்தச் சேய்தியைப் பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா? அல்லது, என்னை முன்பு எப்போதாவது பார்த்திருக்கிருயா?" என்று கேட்டான்.

"நான் எப்படி அந்தச் செய்தியை அறியா திருக்க முடியும்? நாடெங்கும் அதே வதந்திதானே! ஆனல், எத்தனையோ ஆண்டுகள் கழிந்துவிட்டன. நான் கேட்ட வதந்தியை மறந்தே போனேன்."

"ஒரு வேளை வியாபாரியைக் கொன்றவன் இன்னுன் என்பது கூறக் கேட்டிருக்கிருயா?"

கண்ணப்பன் சிறிது சிரித்துவிட்டு, "யாருடைய மூட்டையில் கத்தி கண்டெடுக்கப்பட்டதோ அவன் தான் வியாபாரியைக்கொன்றவன் ஆதல் வேண்டும்! யாரோ ஒருவன், கத்தியை அவன் மூட்டையில் வைத்துவிட்டான் என்ருல், வைத்துவிட்டவன் தான் அகப்பட்டுக்கொள்ளாத வரையில் எப்படித் திருடன்

ஆவான்?—இப்படி யெல்லாம் வதந்தி நிகழ்ந்த துண்டு. அஃதிருக்கட்டும்! மூட்டை உங்கள் தலையின் கீழ் இருந்தபோது அதில் வேறு ஒருவன் எப்படிக் கத்தியை வைக்க முடியும்? அப்படி வைத்தால், வைக்கும்போது நீங்கள் விழித்துக் கொள்ளாமல் இருந்திருக்க முடியுமா?"

**ஆனந்தன் ஐயம்**

கண்ணப்பன் கூறிய மொழிகளைக் கேட்டதும், வியாபாரியைக் கொன்றவன் கண்ணப்பனாகத்தான் இருத்தல் வேண்டும் என்று ஆனந்தன் தீர்மானித்தான்; ஆனால் உடனே எழுந்து, அந்த இடத்தை விட்டுப் போய்விட்டான். இரவு முழுதும் அவனுக்குத் தூக்கமே வரவில்லை. அவன் மனம் துன்பக் கடலில் ஆழ்ந்தது. பலப்பல எண்ணங்கள் அவன் மனத்தில் எழுந்தன. அவன் மனைவியின் உருவம் அவன் மனக்கண்ணிற்கு முன் எழுந்து நின்றது. சந்தைக்குப் போவதற்கு விடை பெற்றுக்கொள்வதற்கு முன் பார்த்த மனைவியின் உருவம் தன் எதிரில் நிற்பது போலவே அவன் பார்த்தான். அவளுடைய முகமும் கண்களும் அவன் முன் தோன்றின. அவள் பேசவும் சிரிக்கவும்கூடத் தன் காதார அவன் கேட்டான். அக் காலத்தில் இருந்த தன் இளங் குழந்தைகளுள் ஒன்று சிறிய சொக்காய் போட்டுக் கொண்டும், மற்றொன்று தன் தாயிடம் பால் அருந்திக்கொண்டும் இருக்கப் பார்த்தான்! தான் காளையாகவும், ஆநந்தமாகவும் அப்போது இருந்த நிலைமையை எண்ணிப் பார்த்தான்; தான் கைது செய்யப்பட்ட சத்திரத்தின் முகப்பில் கவலை சிறிதும் இல்லாமல் ஆநந்தமாகப் பாடிக்கொண்டிருந்ததை எண்ணினான். சாட்டையால் அடிபட்ட இடம் அவன் கண்முன் எழுந்து காட்சி யளித்தது. சாட்டையால் ஓங்கி ஓங்கி அடித்தவன், சுற்றிச் சூழ்ந்

திருந்த மக்கள் யாவரும் காட்சி யளித்தார்கள். கைவிலங்கு, குற்றவாளிகள், இருபத்தா ருண்டுகள் சிறை வாழ்வு, உரிய காலத்திற்கு முன்பே தள்ளாமை அடைந்தது எல்லாம் அவன் மனக் கண்ணிற்கு முன்பு வந்து தோன்றின. இந்த எண்ணங்களெல்லாம் அவன் மனத்தைப் புண்படுத்தின: தற்கொலை செய்து கொள்ளலாமா என்றுகூட அவன் எண்ணினன்.

"இவ்வளவும் அந்த வஞ்சகன்செயல்அல்லவா?" என்று எண்ணியபோது ஆநந்தனுக்கு உண்டான கோபத்திற்கு அளவேயில்லை."கண்ணப்பனைப்பழிக்குப் பழி வாங்கவேண்டும். அதனல் நான் இறந்துவிட்டாலும் பரவாயில்லை" என்று எண்ணினன் ஆநந்தன். ஆனல், "எல்லாம் இறைவன் செயல்" என்ற எண்ணம் உடனே அவன் மனத்தில் எழுந்தது! அடங்கினன் ஆநந்தன், இரவெல்லாம் இறைவனை வழுத்தினன். ஆனல், அவனுக்கு அமைதி உண்டாகவே யில்லை. பொழுது விடிந்தது. கண்ணப்பன் அருகே அவன் போக விரும்பவில்லை; அவனைப் பார்க்கவும் இல்லை.

பதினைந்து நாட்கள் கழிந்தன. இரவெல்லாம் ஆநந்தனுக்குத் தூக்கமே வருவதில்லை, இன்னது செய்வதென்று தெரியாமல் அவன் ஏங்கி ஏங்கித் தவித்தான்.

### கண்ணப்பன் சூழ்ச்சி

ஓர் இரவு தூக்கம் பிடிக்காமல் சிறையில் ஆநந்தன் உலாவிக்கொண்டிருந்தான். சிறைவாசிகளெல்லாரும் விசிப் பலகைகளின்மீது குரட்டை விட்டுத் தூங்கிக்கொண்டிருந்தனர். ஆனல், ஒரு விசிப் பலகையின் அடியிலிருந்து, தோண்டிய மண், வெளியேவந்து விழுந்துகொண்டிருந்தது, "என்ன

அது?" என்று ஆநந்தன் உற்றுப் பார்த்தான், உடனே, கண்ணப்பன், விசிப் பலகையடியிலிருந்து ஊர்ந்து வெளியேவந்து, அச்சத்தோடு ஆனந்தன் முகத்தை நோக்கினான்.

ஆநந்தன் அவனைக் கண்ணெடுத்தும் பார்க்காமலே போய்விட வேண்டும் என்று அடியெடுத்து வைத்தான். ஆனால் கண்ணப்பன் அவன் கையைப் பிடித்துக்கொண்டு தான் சிறைச் சாலையின் சுவருக்கு அடியில் ஒரு வழி தோண்டிக்கொண்டிருப்பதாகவும், பகலில் சிறைவாசிகளோடு தான் வேலை செய்யப் போகும்போது தன் உயரமான பூட்சுகளில் இரவில் தோண்டும் மண்ணை நிரப்பிக்கொண்டு போய் வெளியே போட்டுவிடுவதாகவும் கூறிவிட்டு, "பெரியவரே, தாங்கள் சும்மா இருக்கவேண்டும்! இருந்தால் தாங்களும் தப்பித்துக்கொண்டு வெளியேறிவிடலாம். தப்பித் தவறித் தாங்கள் ஏதாவது உளறிவிட்டால் என்னை உயிர் போகுமாறு சிறைக் காவல்காரர்கள் அடிப்பார்கள். ஆனால் அவ்வாறு அடிபடுவதற்கு முன்பு தங்களைக் கொன்றுவிடுவேன்" என்றான்.

தன் பகைவனைக் கண்டதும் ஆநந்தன் கோபத்தால் கொதித்தான். ஆனால், "தப்பித்துக்கொண்டு ஓடிவிட எனக்கு எண்ணமேயில்லை. நீ என்னைக் கொல்லவும் தேவையில்லை. வெகு காலத்துக்கு முன்பே நீ என்னைக் கொன்றுவிட்டாய்! உன்னைப் பற்றி வெளியில் சொல்வது கேட்டுக் கடவுள் எப்படி எனக்குப் புத்தி கொடுக்கிறாரோ அப்படி நான் சொல்லுவேன்; அல்லது சொல்லாதும் போவேன்," என்று சொல்லிக்கொண்டே தன் கையை அவன் பிடியிலிருந்து விடுவித்துக்கொண்டு ஆநந்தன் போய் விட்டான்.

## ஆநந்தன் அருங்குணம்

மறுநாள் சிறைவாசிகளை வேலைக்கு அழைத்துச் செல்கையில் யாரோ ஒருவன் தன் பூட்சிலிருந்து மண்ணைக் கொட்டிக்கொண்டு போவதைக் காவல்காரர்கள் நோக்கினார்கள். உடனே சோதனை செய்யப் பட்டது. சுவரின் கீழ்த் தோண்டிய இடமும் கண்டுபிடிக்கப்பட்டது சிறையின் தலைமை யதிகாரி, தோண்டியவன் இன்னான் என்பதை அறியச் சிறைவாசிகளை யெல்லாம் விசாரித்தார். எல்லோரும், "ஒன்றும் தெரியாது" என்றே கூறினார்கள்; தெரிந்ததைச் சொன்னால் கண்ணப்பனுக்கு உயிர்போகுமாறு அடி கிடைக்கும் என்று எண்ணியே உண்மை தெரிந்தவர்களும் கூறவில்லை. ஆநந்தன் நீதி தவறாதவன் என்பதை அறிந்த தலைமை அதிகாரி, இறுதியாக அவனை நோக்கி; "பெரியவரே, தாங்கள் வாய்மையே வடிவமானவர்கள் அல்லவா? கடவுள்மேல் ஆணையிட்டுக் கேட்கிறேன். சுவரின் கீழ்த் தோண்டியவன் யார் என்று கூறுங்கள்," என்றார்.

கண்ணப்பன், தான் ஒன்றும் அறியாதவன் போலத் தலைமை யதிகாரியை நோக்காமல் ஆநந்தனைக் கடைக்கண்ணால் உற்றுநோக்கினான். ஆநந்தனுடைய உதடுகளும் கைகளும் துடித்தன. நீண்ட நேரம் வரையில் அவன் வாயிலிருந்து ஒரு மொழியும் வெளிப்படவில்லை.

"என் வாழ்க்கையைக் கெடுத்தவனை ஏன் காப்பாற்ற வேண்டும்? நான் அடைந்த துன்பங்களுக்கு ஈடாக அவன் துன்பம் அடையட்டுமே! .. ஆனால், நான் உண்மை கூறிவிட்டால், அவனை உயிர்போக அடித்துத் துன்புறுத்துவார்களே!............! எனக்குத் துன்பம் செய்தவன் அவன்தான் என்று நான் ஐயம் கொள்வது ஏன் தவறாக இருந்தால் ஆகாது?....... துன்பம் செய்தவன் என்றே வைத்துக்கொண்டாலும்,

இப்போது அவனைத் துன்பத்திற்கு உள்ளாக்குவதனால் நான் அடையப்போகும் நன்மை யாது?"

ஆநந்தன் இவ்வாறெல்லாம் எண்ணி மௌனம் சாதித்தான்.

"பெரியவரே, உண்மை கூறுங்கள்! சுவரின் கீழ்த் தோண்டிக் கொண்டிருந்தவன் யார்!" என்று தலைமை யதிகாரி மறுபடியும் ஆநந்தனைக் கேட்டார்.

கண்ணப்பனைக் கடைக்கண்ணால் ஒரு பார்வை பார்த்துவிட்டு, "மாண்பு மிக்க தலைமை அதிகாரி அவர்களே! நான் அறிந்ததைக் கூறவேண்டும் என்பது கடவுள் விருப்பம் அன்று! தாங்கள் என்னை யாது வேண்டுமானாலும் செய்யலாம். நான் தங்கள் வசத்தில் இருக்கிறேன்," என்றான் ஆநந்தன்.

தலைமை யதிகாரி எவ்வளவோ முயன்று பார்த்தும், ஆநந்தன் உண்மை கூறவே யில்லை. எனவே, அதிகாரி தம்முடைய முயற்சியைக் கைவிட்டு விட்டார்.

## மன்னிப்பு வேண்டல்

அன்றைய இரவு, ஆநந்தன் தன் படுக்கையில் படுத்து உறங்கப் போகும்போது, யாரோ ஒருவன், சந்தடி செய்யாமல் வந்து அவன் படுக்கைமேல் உட்கார்ந்தான். இருட்டிலும் உற்று நோக்கி, அவன் கண்ணப்பன்தான் என்பதை ஆநந்தன் உணர்ந்து கொண்டான்.

"இன்னும் என்னிடம் என்ன வேண்டுகிறாய்? ஏன் இங்கே வந்தாய்?" என்று ஆநந்தன் கேட்டான்.

கண்ணப்பன் ஒன்றும் பதில் கூறவில்லை.

ஆநந்தன் எழுந்து உட்கார்ந்துகொண்டு, "உனக்கு என்ன வேண்டும்? எழுந்து போ! இல்லாவிட்டால் காவல்காரனைக் கூப்பிடுவேன்," என்றான்.

கண்ணப்பன் தன் கையைக் கூப்பி அவனுக்கு வணக்கம் புரிந்து, "ஆநந்தரே, என்னை மன்னித்து விடுங்கள்' என்றான்.

"எதற்காக?"

"நான்தான் வியாபாரியைக் கொன்றவன்; நான்தான் உங்கள் மூட்டையில் கத்தியை வைத்தவன்: உங்களையும் கொல்ல நினைத்தேன். ஆனால், வெளியிலிருந்து ஏதோ சத்தம் கேட்டது. எனவே, கத்தியை உங்கள் மூட்டையில் வைத்துவிட்டு ஜன்னல் வழியாகத் தப்பி ஓடிவிட்டேன்!"

ஆநந்தன் பேசாமல் இருந்தான். என்ன சொல்வதென்று அவனுக்குத் தோன்றவில்லை.

கண்ணப்பன் படுக்கையை விட்டு எழுந்து, தரையில் முழந்தாளிட்டு உட்கார்ந்து, "ஆநந்தரே, மன்னித்து விடுங்கள்! 'கடவுள் அருள் உனக்கு உண்டாக வேண்டும்' என்று கூறி என்னை மன்னித்துவிடுங்கள்! 'நான்தான் வியாபாரியைக் கொன்றேன்' என்று சிறையதிகாரியிடம் கூறி விடுகிறேன்! உங்களை விடுதலை செய்து விடுவார்கள்! நீங்கள் வீடு திரும்பிவிடலாம்!" என்றான்.

"கண்ணப்பா..... சொல்வது உனக்கு எளிதாகலாம் உனக்காக இந்த இருபத்தாறு ஆண்டுகளும்....நான் துன்பம் அடைந்தேன் .. இப்போது.... நான் எங்கே போவது? .. என் மனைவி... இறந்துவிட்டாள்! என் மக்கள்...என்னை மறந்து போனார்கள்! நான் போவதற்கு இடம் ஒன்றும் இல்லை......!'

THE M...



கண்ணப்பன் தரையை விட்டு எழுந்திருக்கவே யில்லை. ஆனால், அவன், தன் தலையைத் தரையில் மோதிக்கொண்டு, "ஆநந்தரே, என்னை மன்னித்து விடுங்கள் !" என்று திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டே அழுதான். பிறகு, அவன் தலை நிமிர்ந்து ஆநந்தனைப் பார்த்தான் :

"என்னைச் சாட்டையால் அடித்தாலும் கூடப் பொறுத்துக்கொள்வது எளிதாயிருக்கும். இப்போது நீங்கள் படும் துன்பத்தைப் பார்த்து என்னால் பொறுக்கவே முடியவில்லை............பாவியான என் மேல் இரக்கம் கொண்டு, காட்டிக் கொடுக்காமல் இருந்தீரே! கடவுள் பொருட்டாக என்னை மன்னித்து விடுங்கள் !" என்று மேலும் மேலும் கெஞ்சிக் கேட்டுக் கண்ணப்பன் அழுதான்.

கண்ணப்பன் அழுகையைக் கேட்டு ஆநந்தனும் அழத் தொடங்கினான்.

### மன்னிப்பு

"கடவுள்.......உன்னை.......மன்னிப்பாராக ! ஒருவேளை.. உன்னைவிட நான்.......நூறு மடங்கு தீயவனாக இருக்கலாம்" என்றான் ஆநந்தன். இவ்வாறு சொன்னவுடனே அவனுடைய மனத்திலிருந்து ஏதோ ஒரு சுமை நீங்கினதுபோலத் தோன்றியது. வீடு திரும்பவேண்டும் என்ற எண்ணமே அவன் மனத்தை விட்டு நீங்கியது. சிறையை விட்டு நீங்கவேண்டுமென்று அவன் விரும்பவே யில்லை. தன் ஆயுள் முடிவு வரும் வேளையையே அவன் விரும்பினான்.

### ஆனந்தன் வெற்றுடல்

ஆநந்தன் எவ்வளவோ அடக்கியும் கூடக் கண்ணப்பன், தானே குற்றவாளி என்று அதிகாரிகளிடம் கூறிவிட்டான். ஆனால், விடுதலை உத்தரவு வருவதற்கு முன்பே ஆநந்தன் வெற்றுடல் ஆனா